விலை ரூபா 2-00 ★ 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆடி 14 ஷவ்வால் 29 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (29—7—84) இதழ் 165

## இருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருவர் துப்பாக்கி சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டனர்

களுவாஞ்சிககுடி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த அம்பிலாந்துறை என்னுமிடத்திலுள்ள மதவு ஒன்றின் அருகில் இந்த இருவரின் சடலங்களும் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டது.

(12-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழரின் நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும்!

## 60 பிரிட்டிஷ் எம். பிக்கள் கூட்டாக வேண்டுகோள்

### லண்டனில் நேற்று ஊர்வலம்

(லண்டனிலிருந்து மாலி)

**இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சியைச் சேர்ந்த அறுபது எம். பி.க்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் 60 எம். பி.க்களும் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை, பிரிட்டனின் பிரபல பத்திரிகையான 'கார்டியனின்' நேற்றைய பதிப்பில் விளம்பரமாக வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் ஜுலையில் இடம்பெற்ற இனக்கலவரத்துக்கு அனுதாபம் தெரிவித்து லண்டனில் நேற்று ஊர்வலம் ஒன்று நடந்தது. சுமார் இரண்டாயிரம் பேர் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில் முன்னுள் யாழ். எம்.பி. திரு.வி. யோகேஸ்வரன், காமராஜ், காங்கிரஸ் தலைவர் இரு. பா. நெடுமாறன், இரா. ஜனார்த்தனன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### பிரிட்டிஷ் எம்.பி.க்களின் அறிக்கை

நேற்று வெளியான 'கார்டியன்' பத்திரிகையில் 60 எம். பி.க்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை 'தமிழ்பேசும் மக்களின் நிரந்தரக் குழு'வினரால் விளம்பரமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜுலைப் படுகொலைகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும், இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நீக்கப்படவேண்டுமென்றும் அந்த எம். பி.க்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### லண்டனில் நேற்று நடந்த ஊர்வலம்

நேற்று நண்பகல் 1-30 மணிக்கு (இலங்கை நேரடி 5-30) ஹைபார்க் கோணரில் ஆரம்பமான ஊர்வலந்தில் சுமார் 2 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர், ஈழம் ஐக்கிய இணைப்புக் குழுவினர் (ஈழம் சொலிடாரிட்டி கம்பயன்ஸ்) ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலத்தில் பிரிட்டனிலுள்ள இடதுசாரி இயக்கங்கள் சிலவும் கலந்துகொண்டன.

இந்த ஊர்வலத்தில் திரு. வி. யோகேஸ்வரன், திரு. ப.நெடுமாறன், வி. பொன்னம்பலம், திரு. இரா. ஜனார்த்தனன், கரிகாலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### யோகேஸ், வி. பி., கரிகாலன் அறிக்கை

திருவாளர்கள் வி. யோகேஸ்வரன், கரிகாலன், வி. பொன்னம்பலம் ஆகியோர் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் ''நியாயமான சிந்தனையுள்ள எல்லா நாடுகளும் இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக குரல்கொடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

### சர்வகட்சிமாநாட்டில் கூட்டணியின் நிலை

## இரண்டாவது சபையை ஏற்கமாட்டோம்! —'அமிர்'

[ஏ. வி. மாணிக்கம்] சர்வகட்சி மாநாட்டில் சில தமிழ் மக்களின் பிரச்னை அடிப்படைக் கோரிக்கைகளுக்கு இரண்டாவது சபையால் எதுவித பரிகாரம் காண முடியாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். சமர்ப்பித்திருக்கிறோம். எமது கோரிக்கைகளை உள்ளடக்காத எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

(12ம் பக்கம் பார்க்க)

### லலித்தின் வெளிநாட்டுப் பயணம்:

## இரண்டு மூன்று மாதங்களில் பிரதிபலன் தெரியுமாம்

[கொழும்பு] தமது திடீர் வெளிநாட்டுப் பயணம் குறித்துப் பலரும் பல விதமாக நினைக்கிறார்கள் என்றும் இந்தப் பிரயாணத்தின்

(12-ம் பக்கம் பார்க்க)

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாத்மா காந்தி றோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு 1
ரெலெக்ஸ்: - 21652, 21742 21918, 21931, PERIMR CE
தொலைபேசி: - 22726 547884, 548626, 549065, 549066

[1091]

## வவனியாவில் 3 கடைகள்மீது குண்டு வீச்சு!

(வவனியா)

வவனியாவில் நேற்றுமூன்று கடைகளுக்கு குண்டு வீசப்பட்டது. இக்கடைகளில் இரண்டு முன்னுள் நகரசபை உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமானது.

நேற்றிரவ நடத்த இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது தெரியவில்லை.

நேற்று முன்தினம பகல் நாலரை மணியளவில் வவனியா நூல்நிலயத்துக்கருகில் 4 குண்டுகள் வெடித்தன.

இதையடுத்து ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின் போது பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். நூல் நிலையத்தில் இருந்த பலர் தாக்குதலுக்குள்ளானார்கள் என்று கூறப்படுகின்றது.

வவனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்னுலுள்ள வீதி போக்குவரத்துக் குத்தடை செய்யப்பட்டுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அம்மி, ஆட்டுக்கல், கல்உரல் திருகை, கோவில் தள வரிசைகள் அனைத்தும் கருங்கல்லில் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்பவர்கள், சூரியா ஸ்டோர்ஸ், வவுனியா. சுண்ணாகத்தில் கிடைக்குமிடம்; ஈஸ்வரி இரும்புக்கடை, கே.கே.எஸ் வீதி சுண்ணாகம். 706

நல்லூர் மூத்தவிநாயகர் வீதியிலுள்ள 2 1/2பரப்புகாணியில் 1 1/4 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: ''லக்சுமி'', 204 A புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு அல்லது 6/21, முத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 975

சாவகச்சேரியிலிருந்து 1 மைல் தூரத்தில் நுணாவில் மேற்கு அரசாங்க சிறுவர் இல்லத்துக்கு அருகில் கண்டி வீதியிலிருந்து 25 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு ஏற்ற 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சட்டத்தரணி நளினி நவரத்தினம், சாவகச்சேரி. 1025

கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் பலாலிவீதிக்கருகாமையில் வீடு கட்டக்கூடிய 2 துண்டுக்காணிகள் (2) ஸ்ரான்லிவீதியில் 3 பரப்புக்காணி (3) நாவற்குழியில் பதினொரு பரப்புக்காணி (4) நல்லூரில் வீடும்- காணியும். தொடர்பு 52, வைமன் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 22334. 1080

Morris oxford 8 Sri எண் ஆயிரம் தொடர் உடன் விற்பனைக்கு உண்டு. 116, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1075

பியானோ (Piano), National Colour T. V 20'' உட்பட மற்றும் வீட்டுச் சாமான்கள், தளபாடங்கள் உடனடி விற்பனைக்குண்டு. வெளிநாடு செல்லவிருக்கும் ஒரு குடும்பத்தினருடையவை 16, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். 1104

உரும்பராய் சந்திக்கு மிக அருகாமையில் செல்லத்துரை வீதியில் பலாலி வீதியிலிருந்து இரண்டாம் காணியாகவுள்ள 4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு திரு. ந. நடராசா, தேவாலய முன் ஒழுங்கை, உரும்பராய் தெற்கு உரும்பராய் 1101

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில், மகளிர் கல்லூரி அண்மையில், குடியிருப்புக்கேற்ற 15 பரப்புக் காணி, துண்டுகளாகவிற்பனைக்குண்டு. Dr. சுவாமிநாதனுடன் அல்லது இளைப்பாறிய றிபேக் ஆசிரியர் கந்தசாமியுடன் தொடர்புகொள்ளவும். உங்கள் விலையை No. 85, Isipathana mawatha, Colom--bo-5, விலாசத்திற்கு எழுதவும். 1092

வீட்டு பாவனைப் பொருட்கள்-கிச்சின் கபினற் (ஜேமன்), லேஸ், மின்விசிறி, மீல்பேக்கர் உடன்விற்பனைக்கு. தொடர்பு: 65, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாள்வு, யாழ்ப்பாணம். 1081

மொறிஸ்மைனர் EL 409 கார் (விலை 15000/-)விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. துரைராஜா, மதவடி ஒழுங்கை, வடலியடைப்பு. 1088

## விற்பனைக்கு

சித்தங்கேணி - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் 2 பரப்பு 5 குளியில் அடங்கிய வீடு (சந்தை, மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி, பெரிய தபாற்கந்தோருக்கு அண்மையில் உள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. S. V. செல்லையா, முருகானந்த வைத்தியசாலை, சங்கானை மேற்கு பண்டத்தரிப்பு. தொடர்புகொள்ளும் நேரம்: காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணிவரை. 1077

கச்சேரி நல்லூர் றேட்டின் அருகாமையில் 2 1/2 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்ளவும்: 86, கச்சேரி, நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1083

நல்லநிலையிலுள்ள ''Barratt and Robinson'' புதிய பியோனோ விற்பனைக்குண்டு. தொடர்பு: 518, நாவலர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1086

Bairaha Farms Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30ந் திகதி திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் ஸ்ரேசன் றோட், பிரம்படி கொக்குவில். 1114

## தேவை

யாழ். நகர் சைவ வேளாளர் குலத்தைச்சேர்ந்தவரும் வெளிநாட்டில் Data Processing Manager ஆகக் கடமையாற்றுபவரும். 33 வயதுடையவரும் உதயத்தில் செவ்வாய் உள்ள வருமான மணமகனுக்கு ஆங்கிலக் கல்வியறிவுடைய அழகான மணமகள் தேவைப்படுகின்றது. தகுந்த சீதனம் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்புடனும் படத்துடனும் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 1067, மே/பா ஈழநாடு. 1067

ஐந்து வருடத்துக்குக் குறையாத அனுபவமுள்ள புகைத்தல் குடிப்பழக்கங்களற்ற பண்புடைய கார்ச் சாரதி உடனே தேவை தகுதியானவர்கட்கு நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். வீட்டில் தங்க விரும்புபவர்கட்கு தங்க வசதியும் உணவும் கொடுக்கப்படும். அரசரத்தினம், கந்தன் அருள். 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1099

எலக்றிக் வெல்டிங் (கேற், கிறில் செய்வதில்) காஸ்வெல்டிங், கம்மாலைவேலை என்பவற்றில் அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. வேலைபழக விரும்புவர்களும்விண்ணப்பிக்கலாம். தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு: து. சத்திவேல், வல்வை மெற்றல் இண்டஸ்றீஸ், காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. 1102

யாழ் நகரில் அமைந்திருக்கும் பாரிய நிறுவனமொன்றில் பங்குதாரராக இணைந்து நிர்வாக அலுவல்களை கண்காணிக்க நேர்மையும் கண்ணியுமுள்ள ஒருவர் தேவை. முதலீட்டாளர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1106 மே/பா ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1106

## FOR SALE

Just Unpacked - Nordmende coloured T. V., 22'' Technics Sterio Amplifier, Technics Sterio Cassette Deck, Dual record Player, Technics Sterio Tuner, Speakers and Cabinet. Offers- Frajmal Enterprises, 93, Second Cross Street, Jaffna. 1094

## WANTED

A leading Trading and Manufacturing organization requires an Accountant, Preferably ove 45 years of age, 10 years experience either in Public or Private sector and with atleast Semi Professional qualification Apply with full details to Advt No: 1109 C/o Eelanadu on or before Aug 3, 1984. 1109

## தேவை

ஜவுளி வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் தேவை, திறமைக்கு ஏற்ப சம்பளமும், தங்குமிடவசதியும் வழங்கப்படும் தொடர்பு ராகுலசூரியன்ஸ், 122 பிரதான வீதி, பருத்தித்துறை. 1064

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## வாடகைக்கு

சகல வசதிகளுடனும், பரந்த நிலப்பரப்பைக் கொண்ட 4 படுக்கை அறைகளைக்கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: 518, நாவலர் றோட், யாழ்ப்பாணம். 1087

25'X20' விஸ்தீரணம் கொண்ட கடை சகல வசதிகளுடனும் பிரதான வீதியில் உண்டு. விபரங்களுக்கு ஸ்ருடியோ சற்குணம்ஸ் 137 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1095

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், 15 வருட அனுபவம் உள்ள ஆசிரியரினால் நுணுக்கமான முறையில் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்காகக் குறைந்த காலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். K. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் 1073

## வகுப்புகள்

ICMA (A) Economics, Rapid Revision question Paper Discussion (1984 Dec) வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதியநேரம் திங்கள், செவ்வாய் 9 - 11 A. M. யாழ்ப்பாணக் கல்வி நிலையம் சாந்தித்தியேட்டருக்கு அருகாமை யாழ்ப்பாணம். 1096

## சோதிடம்

கைரேகை, சோதிடம், பிறநாட்டுப் பிரயாணம், தொழில், உயர்கல்வி, தேர்வு, காதல்கல்யாணம், தீராதநோய்கள் சிறந்த திருமணப்பொருத்தம் இவற்றிற்கான தீர்க்கமான ஆலோசனை பெறலாம். அஞ்சல் மூலம் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளுங்கள். இராசேந்திரன் ''திருவுளம்'' அச்சுக்கூட ஒழுங்கை ஸ்ரேசன் றோட் கொக்குவில். 1090

## தவறிவிட்டது

ஒரு தொகைப்பணம் காணாமல் போய்விட்டது. இதை மைபோட்டோ வேறு எவ்விதத்திலாவது கண்டுபிடித்துத்தருபவர்களுக்கு தொலைந்ததில் மூன்றில் ஒன்று கொடுக்கப்படும். (1/3) செய்வினை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். மற்றவை நேரில் K. Raja Mani Vasa Nunavil West (நுணாவில் மேற்கு) Chavakachcheri. 1093

## காணித் துண்டுகள் விற்பனைக்கு

1. தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்த 8 பரப்பு நில அளவும் போக்கு வரத்து வசதிகளுடன் கூடியதும்.
2. கீரிமலை காங்கேசன்துறை வீதியில் கடல்கரைப் புறமாக உப-தபால் அலுவலகத்துக்கு அருகாமையில்அமைந்த 7 பரப்பு நிலஅளவையுடையது. (தனிநபர் உறுதிகளையுடைய காணிகள்)

விலை விபரங்களுக்கும் உறுதிகளைப் பரிசீலனை செய்யவும் தொடர்பு கொள்க:-

சு. பொன்னம்பலம்,
''பொன் சிவபதி'', இணுவில் தெற்கு, இணுவில். 1069

## முதலாவது ஆண்டு நினைவு தினம்

### ஆ. பேரின்பநாயகம் (இன்பம்)



தோற்றம்:
07-06-49

மறைவு:
29-7-83

மறைந்தாய் மனஞ்சில் மறையவில்லை. சுமந்தாள் நெஞ்சச் சுமை குறைந்தபாடில்லை. அழுது புலம்பியும் மாண்டனீ வருவாயோ

துயருறும் பெற்றோர், சகோதரங்கள்-
நீர்வேலி, 29-7-84. 1097

## ஓராண்டு நினைவஞ்சலி

### திரு. வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

மண்ணுலகு: 13-01-1948



விண்ணுலகு: 29-07-1983

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் குடும்பத்தின் மணிவிளக்காய் விளங்கிய தூயவனே உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

சரவணை கிழக்கு,
வேலணை.
1066

அன்புத்தாய்,
சகோதர சகோதரிகள்,
குடும்பத்தினர்.

## முதலாண்டு நினைவஞ்சலி

கடந்த வருடம் 1983 யூலை வன்செயலின் பொழுது தரணியகலையில் அகால மரணமெய்திய எங்கள் குடும்பத்தலைவர்

### உயர்திரு த. பாலரெத்தினம் J. P.

(தரணியகலைப் பிரபல வர்த்தகர்)

தோற்றம்: 6-9-1918 மறைவு: 29-7-1983



எதிர்பாராது படுகொலைக்கு நீங்கள் பலியாகி ஆண்டு ஒன்று கழிந்திடினும் அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எல்லோருக்கும் இனியவராய் இருந்து அணைந்துவிட்ட சுடரே எம்மையெல்லாம் என்றென்றும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு தெய்வத்துடன் சங்கமமான தெய்வமே நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்களின் இனிய நினைவுகளை மறக்கமுடியாது தவிக்கின்றோம்.

உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்,

1ஆம் வட்டாரம்
அனலை தீவு.
1098

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

## விடுதி வளவுள் ஒரு வேம்பு

விடுதி வளவுள்ளே
ஒரு வேப்பமரம்!

மல கூடங்களை இணைத்து
மறைத்துக் கொண்டிருக்கும்
மதிலிலிருந்து
மூன்று அடி தள்ளி
நிமிர்ந்து நிற்கிறது!

எத்தனை வயதிருக்கும் என்று
மதிக்க முடியவில்லை என்றாலும்
அத்தனை தடிப்பமில்லை!

அதிகாலை எழுந்து
குந்தி எழுந்து கைகால் நீட்டி
உடற்பயிற்சி செய்து விட்டு
தினம் அதிலோர்
குச்சி உடைத்துக் குடைந்து குடைந்து
பல் விளக்குவான் எங்கள் கமல்.

பின்னால் கணேஷ் வருவான்...
பல் துலக்கிக்கொண்டே மதிலில்
மாறி மாறி நடப்பான்; கண்டு
கூச்சலிடுவான் நஸார் நரம்பு தெறிக்க!

பரமுக்கும் பரீதுக்கும் பல்விளக்க
மதிலில் நின்றபடி
குச்சியுடைத்துக் கொடுப்பான்!

வருடா வருடம் விடுதியிலே
இருக்கும் இருநூறு பேரில்
எத்தனையோ பேர் இம்மரத்தில்
குச்சிக்காகக் கிளையுடைத்து இருப்பார்கள்
நீண்டகாலமாய்!

ஆனாலும்
எங்கள் விடுதி வேப்பமரத்தின்
அகலக்கிளைகள் அகன்று போனாலும்
வான் நோக்கிக் கிளையுயர்த்தி
வளர்ந்து கொண்டே நிற்கிறது
வீறுப்போடு.

எங்கள்
விடுதி வளவுள்ளே
அந்த வேப்பமரம்!

— ஒட்டமாவடி அஷ்ரஃப்

# மாரி வருகுது மாடுகள் கவனம்!

இலங்கையின் வறண்ட பிரதேசத்திற்கு வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்று மழையைத் தருகிறது. இம்மழை ஆவணிமாதத்தில் ஆரம்பிக்கும்போது தொண்டை அடைப்பான் எனப்படும் நோய் எருமைகளிலும் மாடுகளிலு தொற்றி இக்கால் நடைகளில் பெருமளவில் இறப்பை ஏற்படுத்துகிறது. இலங்கையின் வறண்ட பிரதேசத்தில் பெருமளவு கால் நடைகள் காணப்பட்டபோதி

எருமைகளிலும் மாடுகளிலும் இறப்பைஏற்படுத்திவிடுகிறது. பண்ணையில் திடீரென ஒரு மாடு இறந்தவுடன்தான் பண்ணையாளன் பதற்றமடைந்து மற்றைய மாடுகளை அவதானிக்க ஆரம்பிக்கிறான். ஆனால்அந்நேரத்தில் மற்றைய மாடுகளுக்கும் நோய் ஆரம்பித்துவிடச் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். இதைத்தொடர்ந்து கிராமத்தில் ஆங்காங்கு இறப்புக் காணப்படுவதோடு நாளாக நாளாக எருமைகள்,

குறைபாட்டினால் பலம் குன்றியுள்ள போதும், கால் நடைகள் இக்காலத்தில் வேலைக்குட்படுத்தப்படுவதால் ஏற்படும் தாக்கத்தினாலும், அதிகவறட்சியின் பின் ஏற்படும் மழையினாலும், அத்தோடு இக்காலநிலையின் போதுநோய்க்காரணியான பக்றீறியா பலம் பெறுவதாலும் இந்நோய் ஏற்படுகிறது என ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது இந்நோயைப் பண்ணையாளன் அவதானித்த சில மணிகளில் கால்நடை இறந்துவிடுவதால் சிகிச்சை எந்தப்பலனையும் அளிக்காது ஆனால் பண்ணையில் நோய் ஏற்படுவதற்கு முன்பு நோய்த் தடுப்பு செய்து கொள்ளலாம்.

### கால் வாய் நோய்

வறட்சி அதிகமாகக்காணப்படும் காலத்தில் மாடுகளிடையே கால் வாய் நோய் தொற்றுவது பண்ணையாளர்கள் அறிந்ததே. இது ஒரு வைரஸ்நோயாகும். இந்நோய் ஏற்படும்போது வாயிலும் நாக்கு, முரசு, உட்தாடைப் பகுதிகள், குழம்புகளுக்கிடையும்குழம்பின்மேற்பகுதியிலும் நீர் நிரம்பிய கொப்பளங்கள் தோன்றும். சில வேளையில் பண்ணையாளன் இக்கொப்

லும் இக்கால்நடைகளின் பெருக்கத்திற்கும் விருத்திக்கும் பெருந்தடையாக இந்நோய் காணப்படுகிறது. கால் வாய்நோய் எனப்படும் இன்னுமொரு நோயும் மாடுகளில் ஏற்படுகிறது கன்றுகள் இந்நோயினால் இறப்பதுமல்லாது பெரிய மாடுகளில் உற்பத்தியும் குறைகிறது. இவ்விரு நோய்களினால் வருடாவருடம் கால்நடைகளிடையே ஏற்படும் இழப்பு சென்றவருட மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட தொண்ணூறுலட்சம் ரூபாவாகும் இந்நோயினால் ஏற்படும் இழப்பு தனிப்பட்ட பண்ணையாளர்களது நட்டத்தைக் கொண்டு வருவதுமல்லாது நாட்டின் விலங்குப்புரத உற்பத்திக்குப் பெரும் இடையூறையும் உண்டாக்கும். நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கிறது

மாடுகள் அதிகளவில் இறக்கக் காணப்படும்.

பொதுவாக நோய்ப்பட்ட மாடுகள் உணவுண்ணாது காய்ச்சல் காணப்படும். வாயின் கீழ்த்தாடைப்பகுதியின் வெளிப்புறமாக வீக்கம் காணப்படும். இவ்வீக்கம் தொண்

**கால் நடைகள் நாட்டின் செல்வம்**

**நோய்களினால் கால்நடைகளிடையே ஏற்படும் இழப்பு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது**

**இந்த இழப்பைத் தடுக்கவேண்டும்**

### தொண்டை அடைப்பான் நோய்

தொண்டை அடைப்பான் நோய் ஒரு வகை பக்றீறியாவினால் ஏற்படுவதாகும். இந்நோய் எருமைகள், மாடுகளையே அதிகம் தாக்குகின்றது. பெரும்போக மழையின் ஆரம்பத்துடன் இந்நோயும் வறண்ட பிரதேசம் பூராவும் பரவலாகக் காணப்படும் இந்நோய் மிக விரைவில்

டைப்பகுதிக்குப் பரவும். இதைத் தொடர்ந்து இவ்வீக்கம் கால்ப்பகுதிக்கு இறங்குவதால் கால்நடைகள நொண்ட ஆரம்பிக்கும் நோய் ஏற்பட்ட ஓரிரு நாட்களில் விலங்குகள் இறந்துவிடும். பொதுவாக இக்காலத்தில் எருமைகள் மாடுகள் தொழுவத்திலும் குளம், குட்டைகளுக்கு அருகேயும், பொதுவான மேய்ச்சல் பகுதிகளிலும் இறந்துகிடப்பதை அவதானிக்கலாம். இந்நோய் வறட்சியின் பின் கால்நடைகள் உணவுக்

பளங்களை அவதானிக்கு முன்பே அவை உடைந்து புண்களாக வெளித்தெரியும். இப்புண்கள் வேதனை தருவதால் மாடு உணவு உண்ணாது நொண்ட ஆரம்பிக்கும். வாயிலிருந்து வீணீர் வடிந்தபடியே

வீனம் அடைவதால் வேலை பெறும் வாய்ப்பை இழக்கின்றன. புண்களைக் கவனியாமல் விடுவதால் இரத்தம் நஞ்சாகி மாடுகள் இறக்கலாம் இவ்வாறு இந்நோயினால் பலவிதமான இழப்புகள் பண்ணையாளனுக்கு ஏற்படுகின்றன மாடுகளில் இந்நோய் ஏற்படாது தவிர்த்துக்கொள்ளத் தடுப்பூசி ஏற்றப்படுறது.

### தடுப்பூசி ஏற்றல்

எருமைகளிலும் மாடுகளிலும் தொண்டை அடைப்

உள்ள சகல அரசாங்க கால் நடை வைத்தியர் காரியாலயங்களிலும் இருந்து இவ்இலவச சேவை கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும். இவ்விரு தடுப்பூசியும் ஒரே நேரத்தில் ஒரு மாட்டிற்கோ அல்லது எருமைக்கோ ஏற்றிக் கொள்ளலாம். நான்கு மாத வயதிற்கு மேற்பட்ட எந்தக் கன்றுக்கும் இத்தடுப்பூசி ஏற்ற முடியும். ஒரு தடுப்பூசி நிரந்தரமானதல்ல. வருடாவருடம் மீண்டும் மீண்டும் இதேகாலத்தில் ஏற்றிக்கொள்ளவேண்டும். கால நடைகளுக்கு இந்நோய்த்

## பண்ணையாளர்களுக்கு ஓர் அறிவுறுத்தல்

இருக்கும். இக்குறிகளை அவதானித்ததும் ஒரு பண்ணையாளன் இதைக் கால் வாய் நோயென இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

இவ் வைரஸ் நோயைச் சிகிச்சை மூலம் மாற்ற முடியாது. நோய் கண்டதும் புண்களைக் குணமாக்கவும் புண்ணைத் தொற்றல் ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும். சிகிச்சை செய்யலாமே தவிர நோயை மாற்றமுடியாது. இந்நோயினால் கன்றுகள் இறக்கநேரிடும் நோயிலிருந்து தப்பித்துக்கொண்ட கன்றுகளின் இருதயம் பலவீனமான தாகவே காணப்படும் பெரிய மாடுகளில் பாலுற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் இழுவை மாடுகள் அல்லது வேலைக்குப் பயன்படுத்தும் மாடுகள் பல

பான், கால் வாய் நோய் ஆகியவை ஏற்படாது தவிர்த்துக் கொள்வதற்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் தற்பொழுது தடுப்பூசி ஏற்றும் விசேட திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளது இத்திட்டம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, புத்தளம், குருநாகலை, மன்னார், முல்லைத்தீவு வவனியா, அனுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகியமாவட்டங்களில் ஆனிமாதம் 15ம் திகதி தொடக்கம் அமுலாக்கப்பட்டுள்ளது இவ்விசேட திட்டம் ஆவணி மாதம் 15ம் திக வரை இம் மாவட்டங்களில் நீடிக்கும் இம்மாவட்டங்களில்

தடுப்பூசியை ஆவணி மாதத்தின்போது ஏற்றிக்கொள்வதால் மழை ஆரம்பித்து நோய் பரவும்போது, கால்நடைகள் நோய் எதிர்ப்புச்சக்தியை இரத்தத்தில் பெற்றுக்கொள்வதால் நோய் தொற்றிக் கொள்ளாது பாதுகாக்கலாம்.

டாக்டர்
சுமன தேவி பாலசுப்பிரமணியம்
(கால் நடை வைத்தியர்)

## மக்களினம் தோற்குமா?!

அக்கிரமம் வென்றதென ஓராணி கைகளிலே
அறைந்திருந்தார்
மக்களினம் தோற்றதென மறுஆணி சால்களிலே
அடித்து வைத்தார்!
கொக்கரித்தார் மண்டியிட்டார் குறும்பான வார்த்தை
கூறி நின்றார் பல
எக்களிப்பும் மகிழ்ச்சிகளும் இன்னொருநாள் வரும்
இருப்ப தன்றோ! வரைக்கும்

— யேசுகாவியத்தில் கண்ணதாசன்

## எம்மதமும் சம்மதம்

எம்மதத்திற்கும் இசைவாய் போற்றி!
சைவம், வைணவம், சாக்தம், கிறீஸ்தவம்,
இஸ்லாம் ஆகிய எம்மதத்திற்கும்
சம்மதமான சாட்சியே போற்றி!

அரன்மாலை அயன்குகன் அல்லா பிதாவெனப்
பலமதம் போற்றும் பரமா வணக்கம்!
எனதென தென்றே யிறுமாந் திடர்செய்
வெறியர் காணு வித்தகா போற்றி!

அனுப்பியவர் ; ராகவன்

— கவியோகி

## மந்திரி வருகிறார்

மந்திரி ஒருவர் மிகத்தொலைவிலிருந்து யாருங்கேட்பாரற்ற ஒரு குக்கிராமத்திற்குத் திடீர் விஜயம் செய்தார்.


பொலிஸ் கன்ட்ரோல் மூலம் அந்தக் கிராமத்திற்குரிய பொலிஸ் சரகம் (தொலைவிலுள்ள சிறு நகரத்திலுள்ளது) வரை தகவல் சேர்த்து மந்திரியின் பயணப் பாதுகாப்புக்கு அவர்கள்வர மிகத்தாமதமாகியது.

இது குறித்து எரிச்சலும் கோபமும் அடைந்த மந்திரி, மக்கள் கூட்டத்தில் உரையாற்

(10-ம் பக்கம் பார்க்க)

# எமது சிறுகதை

# நினைவுச் சிலுவைகள்!



வாகரை வாணன்

தலைக்கோழி கூவுகிறது... படுத்தபாயில் காலை நீட்டி இருந்தபடி வெற்றிலை வட்டாவை எடுத்து பாக்குவெட்டுகிறுள் மரியம்மா. வெட்டிய பாக்குச் சீவலை வாயில் அள்ளிப் போட்ட அவள் ஒரு ''நீர் வெற்றிலைப்' பாதியை எடுத்து அதன் முதுகுப்புறத்தில் சுண்ணும்பைத் தடவி அதை இரண்டாக மடித்து வாய்க்குள்ளே தள்ளுகிறுள். கூடவே ஒரு புகையிலைத்துண்டு பல்லை மினுக்கிக்கொண்டு உள்ளே நுழைகிறது.

வெற்றிலையை நன்கு குதப்புவதும், பின் எச்சிலை ஒரு பேணிக்குள் சளிக்கத்துப்புவதுமாக இருந்த மரியம்மாவுக்கு நிலம் தெளிந்து வருவது தெரிகிறது... அவள் வாரிச்சுருட்டிக்கொண்டு எழும்புகிறுள்.

மரியம்மாவின் கைகள் இயந்திரமாகச் செயல்படுகின்றன. அடுப்பிலே சாம்பலைக் கூட்டி அள்ளி மழையிலே நனைந்த ஈரக்கொள்ளியை வைத்து 'ஊது ஊதென' ஊதி அந்தப் புகைமண்டலத்துள்ளே அக்கினி தேவனைத் தரிசித்து அதன் அருளால் கேத்தலிலே கோப்பி போட்டு வைத்துவிட்டு உலையிலே அரிசி களைந்து போடவும், மகள் 'யோசப்பின்' படுக்கையை விட்டு எழும்பிவரவும் சரியாக இருக்கிறது.

குசினிக்குள் நுழைந்த மகளிடம் கோப்பியைக் கலந்து கொடுத்த மரியம்மா ''மனே கோப்பியைக் குடிச்சிற்று இந்தத்தேங்காயைத்திருவு...குழம்பும் ஒரு ஆணமும் வைக்க வேணும்... பஸ் வந்திடும்...'' என்கிறுள்.

தாயின் அவசரம் மகளுக்குப் புரிகிறது.

காலையின் மணம் கமகமக்கிறது... அந்தக்கிராமத்து மெயின் றேட்டில் மரியம்மாளும், மகளும் பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றனர். பஸ்வரும் சத்தம் கேட்கிறது... மகளிடமிருந்த 'பிளாஸ்ரிக்' கூடையை மரியம்மா வாங்கிக்கொண்டாள். இருவரும் பஸ்ஸில் ஏறுகிறுர்கள்.

காலை எட்டரை மணிக்கெல்லாம் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் வந்திறங்கிய மரியம்மா பாலத்தைக் கடந்து 'விஜயா' தியேட்டர் பக்கமாகவுள்ள ஒரு வீட்டை நோக்கி விறுவிறுவென்று நடக்கிறுள்.

'பிறிசின் காட்' மரியதாஸ் என்றுல் மட்டக்களப்பில் பலருக்குத்தெரியும். வாய் சிவக்க வெற்றிலை போட்டுக்கொண்டு வருவோர் போவோரிடமெல்லாம் நீட்டி முழக்குவதை ஒரு பழக்கமாகக் கொண்டதனுல் அவருக்கு இப்படியொரு பிரசித்தம்

இந்தப் பழக்க தோஷத்தினுல்தான் ஒருமுறை அவருடைய பொறுப்பிலிருந்த கைதியொருவன் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி மெல்லக் கம்பிநீட்டி விட்டான். இதனுல் வேலையிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட மரியதாஸ் ஆறுமாதமாக அலை அலையென்று அலைந்து யார் யாரோ அரசியல் பிரமுகர்களின் கால்களிலெல்லாம விழுந்து, அதேவேலையில் மீண்டும் ஒட்டிக்கொண்டதினுலும் அவர்பெயர் இன்னெருவகையில் பிரசித்தம். இருந்தாலும் பாழாய்ப்போன அந்தப் பழக்கதோஷம் அவரை விட்டுப் போனுல்தானே.

அன்று மரியதாசுக்கு இரவு 'டியூட்டி' கிணற்றடியில் ஏதோ வேலையாக இருந்த அவர், றேட்டில் போன ஒருவரை, பிய்ந்து தொங்கிய தட்டுவேலிக்குள்ளாலே பார்த்து விடுகிறுர் ''என்ன காணும் எங்கை போக...? கையில் மண்வெட்டியோடு வெளியேவந்த அவர் அந்த மனிதரை இழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு முழக்கத் தொடங்குகிறுர். அந்த முழக்கத்தில் அகில உலக விஷயங்கள்கூட அதிர்கின்றன.

காலை எட்டிப்போட்டு நடந்துவந்த மரியம்மாவுக்குத் தூரத்திலே மரியதாசின குட்டை உருவம் தெரிகிறது. ''இண்டைக்கு இவர் வேலைக்குப் போகேல்லையாக்கும்' தனக்குளே சொல்லிக்கொள்கிறுள் அவள்.

மரியம்மாவைக் கண்டதும் மரியதாசுக்கு பரமசந்தோஷம். இண்டைக்குக் கதைக்கு நல்ல ஆள் கிடைச்சிட்டுது என்று நினைதத அவா முகத்தில் சந்தோஷத்தின் ரேகைகள் விரிகின்றன.

மரியதாசின் கவனம் வேறு பக்கம் திரும்பியதைக் கண்ட அந்த மனிதர், 'இதுதான் தருணம்' என்று மெல்ல அவ்விடத்தைவிட்டு நழுவுகிறுர். மரியம்மாவுக்கு, மரியதாஸ் ஸ்கோட்' பண்ணுகிறுர்.

மரியம்மாவைக் கண்டதும் மரியதாசின் மனைவி றேசம்மா வாயெல்லாம் பல்லாக நிற்கிறுள் 'வாருங்க கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் உங்களைப்பத்தி பிள்ளைகளோட கதைச்சுக்கொண்டிருந்தன்... 'இருங்க'... என்று சொல்லியவள் ஒரு 'காத்தான் குடிப்பாயைக்' கொண்டு வந்து விரிக்கிறுள்.

''என்ன செய்யிறது மரியம்மா பிள்ளையளைப் பெத்தாக்கள்ரம்தான் அதிலையும் இந்தக் காலத்தில ஆம்பிளைப் பிள்ளையளாலதான தாய்தகப்பனுக்குப் பெரிய தொல்லை... முகத்தில இரண்டொரு மீசை முளைச்சாப் போதும், நம்மட சொல்லு அவங்க காதில எங்க ஏறுது...''

''அதுதானே பாருங்கோ, இந்தக்காலத்துப் பிள்ளையளுக்குப் புத்திசொல்லவே முடியேல்ல சொன்னுல் ஒண்டில் வீட்டைவிட்டு வெளியேறுதுகள் இல்லாட்டி நஞ்சைக் குடிக்குதுகள். இதுக்குப் பயந்து நாம வாயல்லவா மூடிக் கொள்ள வேண்டி இருக்கு''

அப்பிடி முடிஞ்சு இருந்தாலும் அதுகளாவது ஒழுங்கா நடக்குதுகளா? ... இல்லையே நாமதான் எல்லாத்தாலையும் கஸ்ரப்படவேண்டியிருக்கு''

காலுக்குமேல் கால்போட்டபடி விறுந்தையில் உட்கார்ந்து கொண்ட மாயதாஸ், மரியம்மாவிடம் இன்றைய இளம் சமுதாயத்தைப் பற்றி ஒரு அலசு அலசுகிறுர்.

'றேசம்மா' மரியம்மாவுக்கு கோப்பி கொண்டு வந்து கொடுத்துவிட்டு ஒருபக்கமாக உட்காருகிறுள்.

பீலியாலே தண்ணீர் கொட்டுவது போல் பேசுவதில்' மரியதாசுக்கு றேசம்மா நல்ல ஜோடி என்ற விஷயம் மரியம்மாவுக்குத் தெரிந்ததுதான்.

அவள் கொட்டுகிறுள்...

''புள்ளைகளச் சும்மா குத்தம் சொலலிப் பிரயோசனமில்லைக்கா இந்த உலகம் நல்லா இருந்தாத்தானே அதுகளும் நல்லா இருக்கும். இது என்ன நம்மட காலம்போலயா இருக்கு? சினிமா நாடகமெண்டு எத்தனையோ பிராக்குகள் அதுகளுக்கு... உங்கட மகனையும் எவ்வளவு ஒழுங்கா நீங்க வளத்தீங்க... இப்பிடி நடக்குமெண்டு யார் கண்டா ...?''

றேசம்மாவின் கேள்வி மரியம்மாவின் இதயத்தை ஊடறுத்துப் பாய்கிறது. அவள் தனது சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொள்கிறுள்.

இதற்குமேல் ஏதாவது கதைத்தால் மரியம்மா வாய்விட்டே அழுது விடுவாள் என உணர்நத மரியதாஸ் தம்பதிகள் 'விஷயத்தை' மாற்றுகிறுர்கள்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில்விளக்கமறியலில் இருக்கும் தன் மகனைக் குறிப்பிட்ட நேரத்தில்தான் பார்க்கமுடியும் என்றதனுல் 'எப்படியோ நேரம் போனுல் சரி என எண்ணிய மரியம்மா அவர்களின் கதைகளுக்கெல்லாம் தன் காதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறுள்.

சுவர் மணிக்கூடு மரியம்மாவின் கவனத்தைத் தன்பக்கம் இழுக்கிறது அவள் ஒருவித படபடப்போடு அவர்களிடம் சொல்லிக்கொண்டு எழும்புகிறுள். அதனைக் கவனித்த மரியதாஸ் ''இரு மரியம்மா, நானும் உடுப்பை மாத்திற்று வாறன்'' என்கிறுர். றேசம்மாவும் 'ஓமோம்' போடுகிறுள்

●

'பிறிசின்காட்' சகிதமாக மகனைக் கண்ட மரியம்மாவின் பெற்ற உள்ளம் துடிதுடித்துப் போகிறது. விம்மலும் பொருமலும் அவளிடமிருந்துவெடித்துக்கிளம்புகின்றன. தாயின் மனக்குமுறலைச் சந்திக்கத் திராணியற்ற மகன் மைக்கலின் முகம் தானகவே குனிகிறது

இருவருக்கும் ஆறுதலாக மரியதாஸ் ஏதேதோ சொல்லுகிறுர்... ... மரியம்மா தான் கொண்டு வந்த சோற்றுப் பார்சலையும் வாழைப்பழச் சீப்பையும் மகனிடம் கொடுக்கிறுள்.

●

மகனைப்பார்த்து விட்டு வீடு திரும்பிய மரியம்மாவின்மனம் வெகுவாகச் சோர்ந்து காணப்படுகிறது. சேலையை மாற்றும் நினைவுகூட இன்றி, மகள் கொண்டு வந்து கொடுத்த கோப்பியைக் குடித்துவிட்டு அப்படியே விறுந்தையில் சாய்கிறுள். அவள் மனதில் அவ்வூர் கூப்பன்கடை மனேஜர் அருளானந்தத்தின் முகம் தெரிகிறது. மரியம்மா ஒரு கணம் திடுக்கிட்டே போகிறுள்.

பிய்ந்த சாக்கிலிருந்து சீனி மூடை வரை பின்கதவால் கொடுத்து பெரிய மனிதர்களான கூப்பன்கடை மனேஜர்களில் அருளானந்தமும் ஒருவர்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நேரச்சாப்பாட்டுக்கே அலை அலையென்று அலைந்த அவர் குடும்பம் இன்று ஊரவரின் கண்களிலெல்லாம் பளிச்செனப்படுகின்றதெனில், அதற்கு அருளானந்தத்தின் பின்கதவு வியாபாரம் தான் காரணம்.

இந்தக் கறுப்பு வியாபாரத்தில் சில சமயம் அவர் எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டாலும், கதையாலும், காசாலும் விளையாடிக்காரியத்தைச் சாதிப்பதில் அருளானந்தம் சூரராகவே விளங்கினுர்.

இந்தச் சூரத்தனத்தின் முன் சிலஅதிகாரிகள் கூடத்தலை வணங்கி நின்றுலும் மைக்கலின் நெஞ்சம் நிமிர்ந்தே நின்றது.

மகனின் இந்தப் போக்கை ஆரம்பத்திலே கிள்ளிவிட முயன்றுலும் அதற்கவன் சொன்ன பதில் ஒட்டுக்குள் தலையை இழுத்த ஆமை போல் அவளை ஆக்கிவிடுகிறது.

''அம்மா என் பாட்டி வ... என்ர வேலையத்தான் நான் செய்யிறன், ஆனு ஒண்டு மறியாத இந்த ஊர்ச்சனங்களை அருளானந்தம் சுரண்டி வாழ்றதைத்தான் என்னுல பொறுத்துக்கொள்ள முடியேல்லை இந்த ஊரிலை உள்ள சில படித்த மனிசர்கள் கூட அந்தாளின் பணத்துக்குப் பயப்படுகினம். இவங்களைப் போல மனச்சாட்சியை என்னுல் கொல்லமுடியாது''

ஓரளவு விஷய ஞானம் உள்ள மரியம்மா தன் மகனின் பதிலிலுள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ளாமலில்லை ஆனுல் மனச்சாட்சி என்று இவன் சொல்கிறுனே. அது இந்த மனித சமுதாயத்தில் எத்தனைபேரிடம் இருக்கிறது?

இருந்திருந்தால்...

சில நாட்களின் முன் நடந்த அந்த நிகழ்ச்சியை மரியம்மா திரும்பிப் பார்க்கிறுள்.

வழக்கம்போல, 'பாருங்கள் என் பணத் தொந்தியை'

(10ம் பக்கம் பார்க்க)


## நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✯ தாமதம் ✯ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world at Unbeatable Rates

TFC த பிறின்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680


## மதச் சண்டை வேண்டாம்

பலவுல கங்கள் படைத்தவை பரிக்கும்
பரம்பொருள் ஒருவனென் றறிவீர்
பலபல வடிவிற பக்தர்கள் கண்டார்
பலபல நாமங்கள் சொன்னுர்
உலகினில் மக்கள் உய்திடும் வழியை
உரைப்பவை உயர்சம யங்கள்
நலமென அவற்றை நாம்மதித் திடுவோம்
நம்மிடை பூசல்கள் வேண்டாம்

மெய்மதம் எமதே மேற்கொள்ளும் இதனை
மேற்றிக் குங்களை உய்க்குப்
பொய்மதம் ஏனை சமையங்கள் என்று
புகல்பவர் மெய்யறி யாதார்
தம்மதம் பரப்பத் தகாதுபோர் செய்வோர்
தன்னயங் கருத்தினிற் கொண்டோர்
எம்மதந் தானும் ஏற்றமாம் நெறியை
எமக்குரைப் பதுவென அறிவீர்.
பரிக்கும் — காக்கும்

— புலவர் வே. கனகசபாபதி

# காதலுக்கே அர்ப்பணித்தாள்



மாஞ்சோலை யருகிடமும் மல்லிகையின் காடும்
மணலருகும் புதர் மறைவிற் பேசுதனியிடமும்
தாஞ்சேரும் அல்லிமலர்த் தண்கரையின் பாங்கும்
தான்சோடி தேடுகின்றாள் தனிமையன்றியுண்டோ.

செல்வமகள் என்றென்னையும் எள்ளிமகிழ்ந்தாரோ
சிந்தனையிற் செங்தபிழை ஏதுநினைந் தாரோ
இல்லமதில் அன்னையவள் ஏதுபுகன் றாளோ
ஏமாந்த காளையர்கள் ஏதுமொழிந் தாரோ.

கடல்வற்றித் திடராகப்போனாலும் எங்கள்
காதலது வற்றாது காலமவன் கையால்
உடல்வற்றிப் போனாலும் உள்ளமிரண்டொன்றாய்
உயிரொன்றிப் போனவெமக்கேது பிரிவென்பார்.

அந்திவரும் காலைவரும் இன்றுவரும் நாளை
ஆதவனுதிக்கவரும் என்றுருகிக் காத்து
மந்த்மணத் தென்றலுறும் வாடைவரும் மாறி
மாரிவரும் கோடைவரும் காதலனைக் காணாள்.

பேசவொரு நேசமொழி ஆசையொடு சேர்த்துப்
பின்னாகத் தென்னைமரச் சோலையிலேகாத்து
கூசியிரு கண்பனிக்கக் கால்கடுக்க நின்று
கூறவெனக் கோத்தமொழி யாவுமறந் திட்டாள்.

வேனிலுறு மாந்தளிர்கள் சருகாகி வீழ்ந்த
விரிமலர்கள் காய்ந்துமண மற்றுமண்ணில் வீழ்ந்த
வானிலுறு வெண்மதியும் கலையிழந்து தேய்ந்தாள்
மலர்முகமும்விழியிரண்டும்கவினழிந்து தேய்ந்தாள்.

கன்னமலரைக் கவலையாம்புழு வரிக்க
கதிர்நுதலிற் றிரைக்கோடு கொண்டெழுதக்காதற்
சின்னங்கள் பொறித்தவிதழ்ச் சிவப்பழிய அழகுச்
சிலையாகி நின்றமகள் குலைந்தகொடியானாள்

சூடாத முல்லைப்பூ வாடினவே தோகை
தொட்டெழுதா மையுலர்ந்து தூசிபடர்ந்தனவே
தேடாத கண்ணாடி திரையிட்டு நிற்கத்
தேடுமவள சிந்தனையிற் றிரைமூடி நிற்கும்.

கொஞ்சிவளர் பைங்கிளியே குஞ்சினமே தென்றற்
குழந்தையாம் தூதுவனே கண்டீரோ வென்று
நெஞ்சழிந்து மஞ்சத்து நினைவிழந்த போது
நேராக வந்தொருவன் காலடியில் நின்றான்

பெண்ணேயென் றெடுத்திட்டான் பேசாது நின்றான்
பேசுமவள் கோலத்தைப் பேதைபுரிந்திட்டாள்
கண்ணீரிற் றோய்ந்துவரு கவலையினிற் கரைந்து
காதலினில் மோதிவரும் இன்பமொழி கேட்டாள்.

மண்ணேயென் பாயாகக் கற்பாரம் அணையாய்
மரவேர்கள் மஞ்சமாய் உறங்குகிறேன் உன்னைக்
கண்ணேயென் றழைத்திட்ட இதழெல்லாம் மண்ணிற்
கணக்கெழுதா உயிரினத்துக் குணவாகும் அம்மா!

வெள்ளெருக்கும் முள்ளிலவும் நிழல்காட்டும் நாவல்
விரிந்தசினை வளர்ந்தென்னை வருடியடி தடவும்
உள்ளிருந்து குரல்காட்டும் ஆந்தையொலி யோடு
உருகியிரு புறவினங்கள் வடிக்குமிசை கேட்பேன்.

கையாலே நீ தடவும் கார்க்குஞ்சி மண்ணிற்
கவினழிந்து கிடக்கும்நீ காதலால் அளித்த
கையாழி மணியெல்லாம் கறையான்கள் மூடிக்
கதிரொளியும் இழந்திட்ட காதலியே என்றான்.

அலையுபெனத் தாவிக்கோ ஊனில்லை உறக்கம்
அணையாது கண்ணிமையில் ஆரணங்கே உன்றன்
குலையுமிள அழகேயென் ஆவியினுக்குணவு
குன்றியெலும் பெழுமுடலே நீயளிக்கும் பரிசு.

விண்ணீளம் சாந்திபெறு தலைகின்ற என்றன்
விடாய்க்கு நினதஞ்சனக்கோல் எழுதாத விழியின்
கண்ணீரே தண்ணீராம் மலரிழந்து காரின்
கவினழிந்த குழலேநான் கண்படுக்கும் அணையாம்.

தந்தையவர் பணியாளர் இன்மொழியால் என்னைச்
சதியாலே வாளெடுத்துத் துண்டித்துச் சேர்த்த
அந்தமண்ற் பாயலிலே யாழ்பழித்த நின்றன்
அமுதமொழி குரலிழந்து தேய்வதுவென் கானம்.

தென்றிலினை வெம்மைசெயும் நெட்டுயிர்ப்பே என்றன்
சிந்தையினைக் குளிர்விக்கும் தேடரிய அழகும்
உன்றனிள மைக்கட்டும் உருக்குலைத்துக் காதற்
கொப்பிலலா அர்ப்பணமாய் அளித்திட்டாய்வாழி

என்றவனும் பேசுமுனம் இறுகியணைத்திட்டாள்
ஏதேதோ சொலவெடுத்தாள் காற்றாகிமறைந்தான்
இன்றுவரும் நாளைவரும் என்றிருந்து நாட்போய்
இலங்குநரை மெய்ராகி விட்டதுவும் அறியாள்.

காதலெனும் நினைப்பாலே காலமெலாம் போகும்
காணாத காதலனைத் தேடுகிறாள் இன்னும்
சாதலையும் மறப்பிக்கும் காதலெனும் உண்மை
கன்னியவள் மெய்ப்பித்த பொன்மொழியேயம்மா!

க. சச்சிதானந்தன்

# தொடர் நவீனம்

பல அனர்த்தங்களை நீண்ட நாட்களாகச் செய்து வந்த மழை இப்போது கொஞ்ச நாட்களாக ஓய்ந்து வருகின்றது.

கருமேகங்கள் கூடுகின்றன. குளிர் காற்றுக்கள் வீசிவிட்டன என்பதற்காக இடைக்கிடை தூறுகின்றன. மழை பெய்கின்றது என்று சொல்வதற்கில்லை.

மாறாக வெய்யிலின் உக்கிரம் கூடிக்கொண்டே வருகின்றது சதுப்பாக மாறிவிட்ட புவியை வறட்டிக் காச்சுகின்றது

இதுவரை பெய்த மழையால் வானிலிருந்த தூசு, துணுக்குகளைக் கழுவித் துடைத்த காரணமோ என்னவோ சூரியக் கதிர்கள் எந்தவிதத் தடையோ, உறிஞ்சலோ, திருப்பி அனுப்புதலோ இன்றிப் புவியை நேரடியாகத் தாக்குவது உக்கிரமாக இருக்கிறது.

எவ்வளவு வெப்பத்தையும் ஏற்கலாம் தின மழையை ஏற்கும் நிலையில் மக்களில்லை,

ஒரு சிறிய சூட்கேஸை மட்டும் என்னோடு எடுத்துக்கொள்கின்றேன். இரண்டு இரண்டு சோடி உடுப்புக்களை மட்டும் அதற்குள் திணித்துக்கொள்ளுகின்றேன்

கொழும்பிற்கு ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதற்கான ஒரு ஏற்பாடாகவே இதனைச் செய்துகொள்ளுகின்றேன்.

வைத்த பொருட்களெல்லாம் சரியா என்பதை மீண்டும் பார்த்து மனதைத் திடப்படுத்திக்கொண்டேன்

பெரும் வேலைகளைச் செய்து முடித்தவன்போல் உடல் அலுத்துக்கொண்டாலும், மனம் மிகவும் உற்சாகமாகவே இயங்கிக்கொண்டிருக்கிறது

வீட்டிற்குள் சென்று அம்மாவைப் பார்க்கிறேன். அவள் இப்போதும் படுத்துக்கொண்டு தானிருக்கிறாள்.

பாவம் அவள் வாழ்க்கையில் என்றைக்காவது சிரித்ததை நான் காணவில்லை பாயும், மருந்துமாக இருக்கிறாள் மனச்சுமை வேறு அவளை அழுத்திக்கொண்டிருக்கிறது

## 10

அக்காவைக் கூப்பிட்டு அவள் கையால் தேநீர் குடிக்க வேண்டும்போல் ஒரு ஆசை. அவள் என் பயணத்தைக் கண்டிருப்பாள். என் ஆசைபோல் தேநீர்க் கோப்பையுடன் முன் வந்தாள்.

ஆசையோடு வாங்கிக் குடித்தேன்.

அவள் இப்போது அரைக் கிழவியாகிவிட்டாள் நரை முடிகள் படர்ந்துவிட்டன.

இலங்கையின் புள்ளி விபரப்படி ஒரு பெண் சராசரி அறுபத்தொரு வயதுவரை வாழ்கிறாள் ஒரு பெண்ணுக்கான சராசரி கருவள காலம் நாற்பத்திமூன்று என்று அதே புள்ளிவிபரம் சொல்லுகிறது. இதிலும் இளவயதில் திருமணம் செய்துகொண்டவளுக்குத் தான் அந்த வயதுவரை மகப்பேற்று வாய்ப்பிருக்கும். பிந்தித் திருமணம்செய்து கொள்பவர்களுக்கு ஒன்று, இரண்டு பிறக்கலாம். பிறக்காமலும்விடலாம் என்று அதே புள்ளிவிபரம் காட்டுகின்றது

இந்தக் கணிப்புகளையெல்லாம் முப்பத்தெட்டு வயது நடந்துகொண்டிருக்கிற அக்காவுக்குப் பொருந்தப் பார்க்கிறேன்

என் மனதை யாரோ சம்மட்டிகள்கொண்டு தாக்குவது போன்ற வலி.

ஒரே வாயில்லாப் பூச்சியாக வாழ்ந்துவிட்டாள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

எங்கள் குடும்பநிலைமை அவளின்ரை ஆசைகளை அபிலாஷைகளையெல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டது.




உடலுணர்ச்சிகளைக் கூட மரத்துப்போக வைத்துவிட்டது.

உள்ளதைச் சமைப்பதுவும், தாய்க்கு ஒத்தாசையாய்ச் சமைப்பதுவும், ஏக்கமும் பெருமூச்சுமாய் ஒருநாள் விடியும். அடுத்த நாளும் அதே ஏக்கம்.. அதே பெருமூச்சு.. ... தினம் தினம் ஏக்கமும் பெருமூச்சும் தான் அவள் கண்டவைகள்.

நான் இப்போது நல்லதொரு முடிவுக்கு வந்துவிட்டதாகத்தான் எண்ணிக்கொள்கின்றேன்.

நீண்ட நாட்களாக உருவெடுத்த இந்த ஆசை இனிமேல்தான் நிறைவேறப் போகின்றது.

இந்த நிலைமையில் வேலை தேடிக் களைத்து கடல் கடந்துவிட்ட கணேஷ், சுபாஸ், பரமேஸ், சிவா எல்லோரையும் நினைத்துக்கொள்கின்றேன். அவர்கள் நெஞ்சில் நிறைந்து என்னைத் தட்டிக்கொள்கிறார்கள்.

எனது பாதையில் இந்த ஒரு முடிவைத் தவிர என்னால் வேறொன்றுமே செய்ய முடியாத நிலை

என்முடிவு என்மீது பாசம் வைத்துள்ள ஒவ்வொருவரையும் அணு அணுவாகக் கொல்லத்தான் போகிறது இருந்தும் தவிர்க்கமுடியாத ஒரு சூழலில் நான் என்னையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவனாகிவிட்டேன்

அம்மா தனது ஏலாத உடம்பென்றும் பார்க்கமாட்டாள். வலுவிழந்த கை, கால்கள் என்றும் பார்க்கமாட்டாள். மார்பு மார்பாய்க் குத்தி அழுவாள். அரிப்பெடுக்கும் குரல்வளையால் குழறிக் கூத்தாடுவாள்.

அக்கா ஒருவகையில் சந்தோஷப்படுவாளோ என்னவோ தெரியாது. ஆனால் என்னை ஒரு கணமும் பிரிந்திருக்க மனமில்லாதவள் துடி துடித்துக்கொள்வாள். சில நாட்களுக்கு ஒழுங்காகச் சாப்பிடுவாளோ தெரியாது

எனக்கு எவ்வளவு அன்போடு சாப்பாடு போடுவாள்.

தான் சாப்பிடுகின்ற ஒவ்வொரு வேளையும் என்னை நினைத்து விக்கிக்கொள்ளப் போகிறாள்.

"தம்பி சாப்பிடு... எனக்கிருக்கு நீ சாப்பிடு..." அடம்பிடித்துப் போடுவாள்.

நானும் நன்றாச் சாப்பிட்டுக்கொள்வேன்'

இந்த அன்புக் கரங்களைக் கூட மறந்திருக்க வேண்டிய நிலை.

நான் தன்னை முற்றாக ஏமாற்றிவிட்டதாகத்தான் மாமி நினைப்பாள். அந்தளவுக்கு அவள் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். தர்மினியை எனக்குப் பெண்ணாக்கவேண்டுமென்று கனவுகள் பல கண்டுகொண்டு இருக்கிறாள் என்னுடைய இந்த முடிவால் தன் உழைப்பெல்லாம் வீணென்று தன்னைத் தானே நொந்துகொள்ளப் போகிறாள்.

அம்மா, அக்கா, மாமி, தர்மினி, ரேகா இவர்களையெல்

(8ம் பக்கம் பார்க்க)

'அவலங்கள்' தொடர் நவீனம் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. சிறந்த விமர்சனக் கட்டுரைக்கு

**ரூ. 100 பரிசு**

வழங்குவதற்கு இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டம் முன்வந்துள்ளது.

விமர்சனக் கட்டுரை 'பூல்ஸ்காப் தாளின் ஒரு பக்கத்தில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்

10-8-84 திகதிக்கு முன்பாக ஈழநாடு' வாரமலர் ஆசிரியருக்கு விலாசமிட்டு விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டும்.

# மினிபஸ் பிரயாணிகள்

# பல்லாயிரவர் சார்பில்

# ஒரு விண்ணப்பம்

இந்தத் தலையங்கத்தைப் பார்த்ததும் பலருக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பிரதி வெள்ளிக்கிழமையும் ஒலிபரப்பாகும் ''தலையே நீ வணங்காய்'' என்ற நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வரலாம். ஆனால் நான் அந் நிகழ்ச்சி பற்றி எழுதுவதற்காக இத்தலைப்பைத் தெரிந்தெடுக்கவில்லை. இன்றைய சுறுசுறுப்பான நாளாந்த வாழ்க்கையில் போக்குவரத்து சாதனங்கள் பற்றிக் கூறுவதற்காக அனுபவ ரீதியாக எழுந்த தலையங்கம் இது.

## எஸ். வி. எஸ். சிதம்பரநாதன்

நான்கூறப்போவது இன்னும் விளங்கவில்லையா? ஆமாம்; மினிபஸ் பற்றியது தான். ஆரம்பகாலத்தில் மினிபஸ்களில் ஆசனத்திற்கேற்றாற் போல பிரயாணிகளை ஏற்றினார்கள். பிரயாணிகளும் புதிய வாகனம், வசதியான குஷன் இருக்கை, திரைப்படப்பாடல்கள் என்ற பலதரப்பட்ட காரணிகளால் கவரப்பட்டு மினிபஸ் பிரயாணத்தை விரும்பினர். நாட்கள் செல்லச்செல்ல ''ஐயா கொஞ்சம் தள்ளி இருங்கோ, அம்மா கொஞ்சம் முன்னுக்கிருங்கோ'' என்ற கோரிக்கையோடு மூவர் இருக்கையில் நால்வர் அமரவைக்கப்பட்டனர். பின்பு இப்போ பேசப்படுவது வேண்டுகோளல்ல, சட்டம்: ''விருப்பமெண்டால் ஏறுங்கோ இல்லாவிட்டால் இறங்குங்கோ.''

யாழ்ப்பாணத்தில் எந்த 'றூட்டை' எடுத்தாலும் ஒரு போக்குவரத்துச் சபைப்பேருந்துக்கு, குறைந்தது இரண்டு மினிபஸ்ஸாகுதல் முன்னும் பின்னும் செல்லுகின்றன. அவசர உலகமாகையால், பஸ்ஸிற்குத் தூங்கிக்கொண்டு நிற்காது, அடிக்கடி ஓடுகின்ற மினிபஸ்ஸில் ஏறிப்பயணம் செய்வதை மக்கள் விரும்புவதில் வியப்பில்லை. மினிபஸ் உரிமையாளர்களும் கடன் பட்டு, நகையை அடகு வைத்து, காணி ஈடுவைத்து, 'பினன்ஸ்' பண்ணித்தான் வாகனத்தை ஓட்டுகிறார்கள். ஆனால் நிற்கமுடியாத - பதிவான கூரையுள்ள - மினிபஸ், 'எல்வ்' மினிபஸ் போன்றவற்றுள் நிற்கவைத்துக்கொண்டு செல்கிறார்களே, அதைத்தான் என்னென்றியம்பிடுவேன்!

''அண்ணை ஏறு, தம்பி ஏறு, அக்கா ஏறு, அப்பு ஏறு, ஐயா ஏறு, அம்மா ஏறு'' என்று ஏற்றி கிழங்கு அடுக்கினமாதிரி அடைந்து விட்டால் பணம் சேருகிறது தான். ஆனால் பிரயாணி படும் அவஸ்தை இருக்கிறதே, அதை எப்படிச் சொல்லமுடியும்? நடு ''எலியோடி' போன்ற கம்பியில் பிடித்துக்கொண்டு ''தலையே நீவணங்காய்'' என்று குனிந்த குனியில் நிற்கவேண்டும் கழுத்துவலி நாரிவலிஒருபுறம்; அடிக்கடி பிரேக்பிடிக்க ஊஞ்சல் ஆட்டம் மறுபுறம். முன்னுக்கும் பின்னுக்கும் அக்கம் பக்கமாகவும் நிற்பவர்களின் வியர்வைமணம் வேறு.

மினிபஸ்ஸில் ஏறும்போது, இஷ்ட தெய்வத்தைக்கும்பிட்டுத்தான் ஏறவேண்டும்போல் இருக்கின்றது. செல்லும்வழியிலே பேருந்துடன் ஓட்டப்போட்டி! மற்றைய மினிபஸ்களுடனும் ஓட்டப்போட்டி! உள்ளுக்கிருப்பவர்களைப்பற்றி யார் கவலைப்படுவது? உயிரைக்கையில் வைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்ய வேண்டியதுதான் வருமானம் தேவைதான். இல்லையென்று சொல்லவில்லை ஆனால் வாகனத்துள் இருப்பவர்கள் பற்றியும் யோசிக்கவேண்டாமா? சில மினிபஸ்ஸில் தாள் காசு கொடுத்தால், இறங்கும்போது மிகுதிப்பணம் தருவதாகக் கூறுவார் நடத்துநர் இறங்கும்போது, அவதியில் மறந்துபோனால் அவ்வளவுதான். இதைச்சிலர் வாடிக்கையாக வைத்திருப்பதையும் கவனிக்கக் கூடியதாய் இருக்கின்றது.

எந்தவொரு மினிபஸ்ஸையும் குறிப்பிட்டு இங்கு குறை கூறவில்லை. பொதுவாகவே கூறுகிறேன். எத்தனையோ பாரதூரமான விபத்துக்கள் மினிபஸ்ஸினால் நடைபெற்றும் ஓட்டுநர்கள் 'நொருப்போட்டம் ஓடுவதை விட்டுவிடவில்லை. இவற்றை நிவர்த்தி செய்வதற்கு இரண்டு வழிகள் உள்

(10ம் பக்கம் பார்க்க

# வெகுதூரப் புள்ளிகள்

இங்கே இந்தக் கண்ணீருக்கு
வெகுதூரத்தில் நிற்பதனால்
இன்னும் இந்த இதயத்தோடு
உறவாட முடியாத
அந்நிய மனிதன் நீ!

வெகுதூர மரச்சுவரின்
பொன்கசியும்
துளிர்பாடத்துணிந்த உன்
சொல்சிந்தும் சதங்கையிலே
இந்த இதயத்தின்
துடிப்பேதும் அதிரவில்லை
ஏனென்றால்
இந்தக் கண்ணீருக்கு
வெகுதூரம் நிற்கின்றாய்;

உன் ஓசைத்தடமேதம்
எங்கள் ஆழ்மனத்தின்
ஓர் புள்ளியையேனும்
துளாவ முடியாத
வெறுங்கயிறாய் நிற்பதெல்லாம்
அந்தஸ்தின் இடைவெளிதான்!

செண்பகப் பூப்பாட்டும்
சொர்க்கத்துச் செடிப்பூவும்
இந்தக் கண்ணீரை அணைக்காத
வெகுதூர மத்தாப்பாய்
மின்மினியின் மணிச்சரமாய்
வருகின்ற சொல்சிந்தும் சதங்கையிலே
இந்த இதயத்தின்
துடிப்பேதும் அதிரவில்லை.

சபா. ஜெயராசா

# சிறுவர் மஞ்சரி

★ தொகுப்பு: என். செல்வராஜா

### சீனக் கதை

## அவனுக்கு அது மாணிக்கக் கல்

முன்னொரு காலத்தில் ஒருவன் இருந்தான். ஒருநாள் அவன் வழியில் ஒரு கல்லைக் கண்டெடுத்தான். அது உருண்டையாய் 'வழவழ'வென்று இருந்தது. அவன் அதை மாணிக்கக் கல் என்று நினைத்தான்.

அவன் உடனே வீட்டுக்கு ஓடிப்போனான் ஒரு பட்டுத் துணியை எடுத்து அக்கல்லைச் சுற்றினான். பின் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அதன்மேல் பத்துக்கு மேலான பட்டுத் துணியைச் சுற்றினான் பின் அந்தப் பொட்டலத்தை ஒரு சிறிய பெட்டிக்குள் வைத்தான் அந்தச் சிறிய பெட்டியை இன்னொரு பெட்டிக்குள் வைத்தான். இப்படியே பத்துக்கு மேலான அடுக்குப் பெட்டிக்குள் வைத்தான்.

மற்றொருவன் இந்த மனிதன் மாணிக்கக் கல்லைக்கண்டெடுத்த சேதியை அறிந்தான். உடனே அவன் இந்த மனிதன் வீட்டுக்கு வந்தான். ''அந்தக் கல்லை எடு, பார்ப்போம்'' என்று கேட்டான்.

''சரி, காட்டுகிறேன் சற்றுப் பொறுங்கள்'' என்று இந்த மனிதன் சொன்னான். பின்புபோய்க் குளித்தான். புதிய ஆடைகள் அணிந்தான். அதன் பின் அந்தப்பெட்டியை

[12ம் பக்கம் பார்க்க]

✶ ராணி சின்னத்தம்பி

## கிரகங்களும் சுழற்சிகளும்

பூமி தன்னைத்தான் சுற்ற இருபத்து நான்கு மணித்தியாலங்களும் சூரியனைச் சுற்றிவர 365 நாட்களும் எடுக்கின்றது என்பது நீங்கள் அறிந்ததே ''வியாழன்'' கிரகம் சூரியனைச் சுற்றிவர பதினொன்றரை வருடங்கள் ஆகுமாம் அதேபோல சூரியனைச் சனி சுற்றிவர இருபத்தொன்பதரை வருடங்களும், 'நெப்ரியூன்' சூரியனைச் சுற்றிவர 165 வருடங்களும் யுரேனஸ் சூரியனைச் சுற்றிவர 84 வருடங்களும் எடுக்கும். 88 நாட்களில் புதன் சூரியனை வலம் வந்து விடுகிறது. செவ்வாய் சூரியனை முழுமையாக சுற்றிவர ஒன்றேமுக்கால் ஆண்டுகள் எடுக்கும். வெள்ளிக் கிரகம் 225 நாட்களில் சூரியனை வலம் வந்துவிடுகிறது. 'புளூட்டோ' கிரகம் சூரியனைச் சுற்றிவர எவ்வளவு ஆண்டுகள் எடுக்கின்றன தெரியுமா? முழுமையாக 348 வருடங்கள் ஆகும்.

ஜனனி. சபா புஷ்பநாதன்

✶ கதைப்பாடல்

## நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை - அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா!
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா!

உள்ளே புகுந்து நெல் தின்று தின்று- வயிறு
ஊதிப்புடைத்துப் பருத்ததடா!
மெள்ள வெளியில் வருவதற்கும் - ஓட்டை
மெத்தச் சிறிதாகப் போச்சுதடா!

பானையைக்காலை திறந்தவுடன் - அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்த ஒரு
பூனை எலியினைக் கண்டதடா - ஓடிப்
போய் அதைக் கௌவியே சென்றதடா!

கள்ள வழியினில் செல்பவரை - எமன்
காலடி பற்றித் தொடர்வானடா!
உள்ள படியே நடப்பவர்க்குத் தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா!

– சி. தேசிகவிநாயகம்பிள்ளை

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்

நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்

SHABRA

துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் ''ஷப்ரு''

61, நியூ புலர்ஸ் வீதி
கொழும்பு - 4-
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073



பச்சிலைப்பள்ளியில் யானைக்கூட்டம் தென்னைகளைத் துவம்சம் செய்துகொண்டிருப்பதை ஒல்லாந்தர் படமாக வரைந்திருந்தனர்.

ஆதாரம்: குருபால்தேயு




மன்னாரிலிருந்து நடந்து வந்த களைப்பு ஒல்லாந்தப் படை வீரர்களிடம் தெரிந்தது. அவர்களில் பலர் கால் வீக்கத்திற்குள்ளாகி இருந்தனர். சப்பாத்துக்கள் அவர்களின் பாதங்களைப் புண்படுத்தியிருந்தன. நீண்ட ஓய்வினை அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் கொமுசாறி வன்கோயன் யாழ்ப்பாணத்தை விரைவாக அடைவதை இலக்காகக் கொண்டிருந்தான்.

பச்சிலைப்பள்ளியில் தென்னை மரங்களை யானைக்கூட்டமொன்று துவம்சம் செய்த காட்சியின் தாக்க வியப்பு அவர்களுக்கு இன்னமும் தீரவில்லை

புறப்பட்ட நாளிலிருந்து அவர்கள் நடந்திருக்கிறார்கள். இரவு வேளைகளில் ஒரு ஐந்து மணிநேர அவகாசமே தூக்கத்திற்குக் கிடைத்தது. சாப்பாடு அவர்களைப் பொறுத்தளவில் திருப்தியாகவில்லை அவர்களின் அகன்ற தொப்பிகளையும் மீறி வெயில் அவர்களை எரித்தது. அவர்களின் நீண்ட அங்கிகள் வியர்வையில் தோய்ந்து போயின.

போர்வீரர்களில் சிலருக்குத் திசைவீரசிங்கன் மீது ஆத்திரமாக இருந்தது. அவன் தான் காடு மேடெல்லாம் நடந்து வரக்காரணமாக இருந்துவிட்டான். அவர்கள் கடல் வழியாக வந்து யாழ்ப்பாணத்தைத் தாக்கியிருக்கலாம்.

தென்மராட்சி முதலியார் திசைவீரசிங்கனுக்காகச் சாவகச்சேரிக் கிராமத் தலைவன் அவர்களுக்குவிருந்தளித்தான். அவ்விருந்து அவசரம் அவசரமாய்ச் சாவகச்சேரியில் நடந்தது. மர நிழல்களில் படைவீரர்கள் ஓய்வாக அமர்ந்திருந்தனர் அவ்விருந்தின் போது.

படைவீரர்களுக்கு விருந்து படைக்க வாழையிலைகள் சேகரிக்கப்பட்டபோது திசைவீரசிங்கன் கிராமத்தலைவனைத் தடுத்தான்.

''வாழையிலை தேவையில்லை. இவர்களுக்குத் தேங்காய்ச் சிரட்டைகளில் சோற்றை நிரப்பிக் கொடும். அவர்கள் கைகளில் வைத்துச் சாப்பிடட்டும்...''

கிராமத்தலைவன் திகைத்து ஒரு கணம் நின்றிருந்தான்.

''என்ன நினைப்பார்கள்? அடிமை குடிமைகளுக்கு நாங்கள் சாப்பாடு அளிப்பதுபோல சிரட்டையில் அளிப்பதா...?''

''நான் சொன்னதைச் செய்யும். அவர்களுக்கு அதொன்றும் புரியாது. சிரட்டையில் சோறு கொடுப்பது எங்கள் வழக்கம் என்று நினைப்பார்கள்..'' என்றான் திசைவீரசிங்கன்.

ஒல்லாந்தப்படை வீரர்களுக்குச் சிரட்டைகளில் சோறு வழங்கப்பட்டது. அவர்களின் பசிக்கு அக்கிராமத்தில் வழங்கப்பட்ட சோறு அமிர்தமாக இருந்தது. மூன்று நான்கு தரம் சிரட்டைகளில் வாங்கிச் சாப்பிட்டார்கள்.

அன்று பின்னேரமே அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். அன்றிரவு அவர்கள் நாவற்குழியில் தங்கினார்கள். அதிகாலையில் அவர்களின் பயணம் தொடங்கியது. வன்கோயன் தன்வீரர்களைக் கடற்கரையோரமாக நடத்திச் சென்றான் யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் கரையோரமாக இவர்கள் யாழ்ப்பாணப் பட்டினம் நோக்கி நடந்தார்கள். வாத்தியங்களும் 'ட்ரம்' களும் முழங்க அவர்கள் ஆர்ப்பாட்டமாகச் சுண்டிக்குளியை அடைந்தபோதுதான் அந்த நிகழ்ச்சி நடந்தது.

பறங்கித் தெருவில் அமைந்திருந்த தேவாலயம் ஒன்றினுள் போர்த்துக்கீச வீரர்கள் பலர் பதுங்கியிருந்தனர். மன்னார்க் கோட்டையிலிருந்து தப்பிவந்த போர்த்துக்கீசரில் ஒரு பகுதியினர் அந்தத் தேவாலயத்திற்குள் இருந்தனர்.

அவர்களை வழிநடத்தி வந்த கப்ரின் அறன்காவும் றிபேறியோவும் யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கிப் படைவீரர்களுடன் முன்னேறிக்கொண்டிருந்தனர். இடையிடையே எதிரிகளைத் தடுத்துத் தாமதப்படுத்தப் பலவிடங்களில் வீரர்களை நிறுத்தியிருந்தனர்.

தேவாலயத்திலிருந்து வெடித்த முதற்குண்டு, கொமுசாறி வன்கோயனின் அருகில் வந்து கொண்டிருந்த போர்வீரன் ஒருவனைத் தாக்க, அவன் சுருண்டுநிலத்தில் விழுந்தான்.

யாழ்ப்பாண மண்ணில் போர்த்துக்கீசருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான சண்டை ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான ஒல்லாந்த வீரர்களின் முன் தேவாலயத்தில் ஒளிந்திருந்த இருபத்தைந்து போர்த்துக்கேய வீரர்களால் எதுவும் செய்யமுடியவில்லை. திரித்துப்பாக்கிகளால் சுட்டுவிட்டு மறுதடவை மருந்து கெட்டிப்பதற்கு முன்பே ஒல்லாந்தப்படை வீரர்கள் தேவாலயத்திற்குள் பாய்ந்துவிட்டார்கள். போர்த்துக்கீச வீரர்களில் பதினைந்து பேர் சூடுபட்டு மரணமானார்கள். பத்துப்பேர் ஒல்லாந்தப் படைவீரர்களின் வாள்வீச்சினால் தலை துண்டிக்கப்பட்டார்கள்.

## 9

முதலாவது வெற்றி அவர்களுக்குக் களிப்பைத் தந்தது ஆரவாரம் செய்தார்கள். ஒல்லாந்தப்படை வேகமாக யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி முன்னேறியது. வழியில் பலவிடங்களில் போர்த்துக்கீசரின் தாக்குதல்கள் நடந்தன அவர்களைச் சுட்டும் வெட்டியும் அடித்தும் ஒல்லாந்த வீரர்கள் கொன்றழித்தார்கள்.

படைவீரர்கள் நடந்த பாதைகளின் சந்திகளில் சடலங்கள் விழுந்துகிடந்தன. யாழ்ப்பாணப்பட்டினம் பயத்தால் அமைதிகண்டது. பறங்கித் தெருவில் குடியிருந்த போர்த்துக்கீச அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் ஒல்லாந்தப்படை வருகின்ற செய்தி கேட்டுக் கோட்டைக்குள் ஓடிப் புகுந்து கொண்டார்கள். யாழ்ப்பாண மக்கள் அமைதியை விரும்புபவர்கள் அவர்களில் பலர் படைவரும் செய்தியைக் கேள்விப்பட்டுக் கிராமப்புறங்களுக்குப் பயந்து சென்று விட்டார்கள். ஒல்லாந்தப்படை வீரர்கள் யாழ்ப்பாணப் பட்டினத்தை நெருங்கியதும், பட்டினத்தில் தங்கியிருந்த போர்த்துக்கீச வீரர்களும் பின்வாங்கிக் கோட்டைக்குள் புகுந்துகொண்டார்கள்.

கொமுசாறி வன்கோயன் பெருமிதமாகவும் வெற்றிக் களிப்புடனும்சிரித்தான் அவன்

# யாழ்ப்பாணம் முற்றுகை

எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு இலகுவில் யாழ்ப்பாணப்பட்டினம் தம் வசமாகும் என்று. கோட்டை கைப்பற்றப்பட்டால் யாழ்ப்பாணப்பட்டினத்தின் நிர்வாகம் ஒல்லாந்தரின் வசமாகும். யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றி ஒல்லாந்தப்படைவீரர்கள் முற்றுகையிட்டார்கள். கோட்டையின் கொத்தளங்களிலிருந்து பீரங்கிகள் சுடப்பட்டால தாக்கப்படாத தூரத்தில் அவர்கள் முற்றவெளியில் தங்கினர்.

யாழ்ப்பாணக்கோட்டை பலமானது என்பதை வன்கோயன் உணர்ந்து கொண்டான். கோட்டை நான்கு கொத்தளங்களை நான்கு திசைகளிலும் கொண்டிருந்தது. அந்த நான்கு கொத்தளங்களையும் இணைத்துப் பிறைவடிவில் மதில்கள் அமைந்திருந்தன. அவற்றின் அமைப்பிலிருந்து அச்சுவர்கள் குறைந்தது பதினாறுஅடிகளாவது தடிப்பு இருக்கும் என வன்கோயன் கணித்துக்கொண்டான். அந்தக் கோட்டை கடலை நோக்கி அமைந்திருந்தது. கடல் புறமான முற்றுகை வன்கோயனுக்குச் சாத்தியப்படவில்லை. கோட்டையின் வட புறமாகவும் கிழக்குப்புறமாகவும் போர்வீரர்களின் முற்றுகை நிகழ்ந்தது.

அவர்கள் கோட்டையைச் சுற்றி இருபக்கங்களில் பாசறை அமைத்துக்கொண்டார்கள்.

யாழ்ப்பாணப்பட்டினம் ஒரு சிறிய நகரமாக இருந்தது. சத்திரங்களும் பொதுக்கிணறுகளும் கடைவீதிகளும் அமைந்திருந்தன கல் கட்டிடங்கள் பல காணப்பட்டன. அவை தாழ்ந்த கூரைகளைக் கொண்டவையாக இருந்தன மக்களது வீடுகள், விருந்தைகளையும் தலைவாசல்களையும் கொண்டிருந்தன. மண்சுவர்களையும் ஓலைக்கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

வடக்கன் காளைகளால் இழுக்கப்பட்ட பெரிய கூடார வண்டில்கள் பட்டினத்தில் ஒடுங்கிய வீதிகளில் பொருட்களை ஏற்றிச்சென்றன. ஒல்லாந்தரின் முற்றுகை தொடங்கியதும் யாழ்ப்பாணப் பட்டினக்கடைத் தெருக்கள் வெறிச்சோடிப்போயின.

திசைவீரசிங்கன், வன்கோயனிடம் விடைபெற்றுப் பட்டினத்திற்குள் சென்றான். பலரைக்கண்டு பேசினான். வீடுகளுள் பதுங்கிக் கிடந்தவர்களை வழமைபோலப் பட்டினத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டான்.

மூன்று நாட்களின் பின்னர் யாழ்ப்பாணப்பட்டினம் வழமைக்குத் திரும்பியது. எனினும் ஆங்காங்கு சில பிரச்னைகள் ஒல்லாந்த வீரர்களின் வடிவில் உருவாகின. பாசறைகளில் இருந்த வீரர்களில் பலர் பட்டினத்திற்குள் பிரவேசிப்பதும் வியாபாரிகளிடம் தமக்குத் தேவையான பொருட்களை அள்ளிக்கொள்வதும் புதியதொரு பிரச்னையாக உருவானது. வீதிகளில் தலைச் சுமையாகக் காய்கறிகளைச் சுமந்து வருபவர்களிடம் அவர்கள் தகாத முறைகளில் நடந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாண மக்களின் ஆடையணிகள் அவர்களுக்கு வியப்பைத் தந்தன. வேட்டியை மடி வைத்து பஞ்சகச்சமாக ஒரு பகுதியினர் கட்டியிருந்தனர். அவர்களில் சிலர் சால்வை போட்டிருந்தனர். வேறு சிலர் அரையில் ஒரு துண்டை மட்டும்கட்டியிருந்தனர். பெண்களில் பெரும்பாலானோர் றவுக்கையணியாது, சேலைத் தலைப்பால் மார்புகளை மூடியிருந்தனர், ஒரு பகுதிப் பெண்கள் இடுப்பில் சேலையை மடித்துக்கட்டி மார்பகங்கள் மறைக்கப்படாத 'கவர்ச்சிக் கன்னி'களாகக் காட்சியளித்தார்கள்,

ஒல்லாந்த வீரர்களுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்தின் செழிப்புப்புலப்பட்டது.

கொமுசாறி வன்கோயன் வெகு விரைவில் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டான். ஒல்லாந்த வீரர்கள் எவரும் பட்டினத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது எனக்கட்டளையிட்டான்.

யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டுப் பல நாட்களாகியும் தாக்குவதற்கான ஆயத்தங்களை வன்கோயன் எடுக்கவில்லை. திசைவீரசிங்கனுக்கு அவனது அமைதி வியப்பைத் தந்தது. இவ்வளவு படை வீரர்களையும் பீரங்கிகளையும் துவக்குகளையும் வைத்துக்கொண்டு ஒல்லாந்தத்தளபதி காலத்தைக் கடத்துவது அவனுக்கு வியப்பைத்தந்தது.

ஒரு நாள் வன்கோயனை நேரில் கேட்கவும் செய்தான்.

திசைவீரசிங்கனை வன்கோயன் அமைதியாகப் பார்த்தான். பின்னர், ''யாழ்ப்பாணப்பட்டினத்தைப்போர்த்துக்கீசர்கைவிட்டுவிட்டார்கள். இப்போது அவர்கள அனைவரும்

(10-ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் எப்படி?

## இன்று

மாதம் - ஆடி
திகதி -14 (1984-7-29)
வாரம் - ஞாயிறு
திதி - பிரதமை பிற்பகல் 4-03 வரை
நக்ஷத்திரம் ' ஆயிலியம் பின் இரவு 1-19 வரை

### மேஷம்

பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். திருடர் பயத்திற்குமிடமுண்டு காணிப் பிணக்கும் கவலையைத் தரலாம். விவசாயிகள் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும். அடக்கமான நடவடிக்கையின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். அம்மனை வழிபட்டு வரவும்.

### ரிஷபம்

உங்கள் முன்னேற்றத்திற்கு முதியவர் ஒருவர் வழிகாட்டுவார் பிறருடைய மதிப்புக்கு இலக்காகுவீர்கள். சொகுசான வாழ்க்கையும் கிடைக்கும். வரவேற்கவேண்டிய வாரம். பத்திரகாளி வழிபாடு நன்று.

### மிதுனம்

சுறுசுறுப்புக் குன்றும். சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள்; கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும். பெரியவர் ஒருவருடன் கருத்து வேற்றுமை உருவாகலாம். அடக்கம் நன்று தட்சணாமூர்த்தியை வழிபடவும்.

### கடகம்

தனவரவிற்கு இடமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுத்து வருவார்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டு. வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் மகாவிஷ்ணுவை வழிபடவும்,

### சிம்மம்

உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு. ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு சிவபெருமானை வழிபட்டு வரவும்.

### கன்னி

குழந்தையொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக்கொள்ள நேரிடும். கவனம் வேண்டும். பெருமாள் பெருமானை வழிபடவும்.

### துலாம்

கனிவான சம்பவங்கள் இடம்பெறும். காதலர்களுக்குக் கனகுஷியான வாரம். சிலருக்குத் திடீர்த் திருமணமும் நடைபெறும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெற்றோர் ஆதரவும் உண்டு. இவ்வாரம் சிந்தனைக்கிணங்கிய முடிவெடுத்து நடந்துகொள்ளவும். முருக வழிபாடு நன்று.

### விருச்சிகம்

ஏக்கத்தின் சாயல் தாக்கும் நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளிடம் பகைத்துக்கொள்ளவேண்டாம் பொருட் செலவும் உண்டு உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். சுப்பிரமணியரை வழிபடவும்.

### தனுசு

கட்டிவெல்லம் போல் வாழ்க்கை இனிக்கும். காதலர்கள் எண்ணங்கள் கைகூடும். இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும் எதிர்பாராத வரவினால் திருப்தி ஏற்படும். விஷ்ணுவை வழிபடவும்

### மகரம்

தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழி கோளப்படலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம் பேட்டி காண்பதற்கு ஏற்ற தினம். வியாபாரத்துறையில் ஈடுபடுவோர்களுக்கு விருத்தியுண்டு. வேலவனை வேண்டிக்கொள்ளவும்.

### கும்பம்

வேண்டிய அளவிற்கு இவ்வாரம் வெள்ளிப்பணம் துள்ளும். புதியநண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள் சகலதுறைகளிலும் முன்னேற்றமுண்டு. பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரத் துறையில் வெற்றியும் கிடைக்கலாம் சூரியபகவானை வழிபடவும்

### மீனம்

கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராத வகையில் பொருட்செலவிற்கும் இடமுண்டு. தொழில் துறையில் சிறிது மனக்கசப்புத் தென்படலாம் திடீர் முடிவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். உடல் நிலையைப் பேணவும். சுப்பிரமணியரை வழிபடவும்.

திருமலை.க.வே.ரவீந்திரன்

# அவலங்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் நினைத்துக்கொள்கிறேன். இவர்கள் வாழவேண்டுமென்றால் நான் வாழவேண்டும்.

மாடுபோல உழைத்து கழுதைபோல சுமந்து கொட்டினால்தான் இந்தக் கிடங்குகளை நிரவமுடியும்.

அதனால்தான் நான் இத்தகைய ஒரு முடிவுக்கு வரவேண்டியவனாகிவிட்டேன்.

சுபாவை நான் ஏமாற்றியவன். என் சூழலால் நான் ஏமாற்றினேன் என்று மட்டும் சொல்வேன். என்னை நம்ப வைத்துத் தானும் நம்பி வாழ்ந்துகொண்டு வருபவள்.

நல்ல தகுதியுள்ள குடும்பத்துப் பெண் - நல்ல ஒரு படிப்பாளியை. நல்ல ஒரு உழைப்பாளியைத் தனக்குத் தேடிக்கொண்டிருக்கலாம். அவள் விதி என்னோடு சிறிது காலம் விளையாட வைத்துவிட்டது.

...... இந்த வருடத்துள் நீங்கள் நல்ல ஒரு முடிவுக்கு வரவேண்டும். இல்லையென்றால் அப்பாவின் முடிவுதான் என் முடிவாகவும் இருக்கும்......

அவள் தனது இறுதிக் கடிதத்தில் தடித்த எழுத்துக்களால் கோடிட்டு எழுதிய அந்த வசனங்களை மனதிருத்திப் பார்க்கிறேன்.

எனக்குள் ஒரு திருப்தி. நிச்சயமாக அவள் புதிய ஒருவனை வாழ்க்கைத் துணைவனாகக்கைப் பிடிக்கப் போகிறாள் என்று...

அவள் வாழவேண்டியவள். ஒருவன் இல்லையென்றால் தங்களை மாய்த்துக்கொள்வதல்ல அழகு. தனக்கு விரும்பிய இன்னொருவனைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான்.

புத்திசாலிப் பெண் பண்பாக நடந்துகொள்வாள் என்ற நம்பிக்கை.

இருந்தும் என் தசைநார்கள் துடித்துக்கொண்டே இருக்கின்றன.

சகல ஏற்பாட்டையும் தானே கவனிப்பதாக எழுதிய நண்பனின் நம்பிக்கையான கடிதத்துடனும் ஏற்கனவே முடித்துவைக்கப்பட்ட கடவுச்சீட்டு, கனடாவுக்கான விஸாவுடனும் அகதி என்ற போர்வையில் குடியேறத் திட்டமிட்டுவிட்டேன்.

அதற்காக நான் இப்போது உற்சாகமாகப் பிரயாணம் செய்து கொள்ளுகின்றேன் நான் எங்கே போகின்றேன் என்பதை நான் போனபின்தான் அவர்களுக்கு அறிவிப்பேன்

எல்லோருக்கும் பொதுவான ஒரு கடிதத்தை எழுதுகின்றேன்

அன்புள்ளவர்களுக்கு,

நான் உங்களைவிட்டுத் தூர விலகிவிடவில்லை. உங்கள் நலனுக்காக உழைக்கவே ஓடிவந்திருக்கிறேன். ஆனால் உங்களைச் சந்திக்கும் துர்ப்பாக்கியத்தை மட்டும் இழந்துவிட்டேன்

எனது முடிவு உங்களுக்கு வேம்பாகவே இருக்கும் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். இருந்தும் என்னால் இந்த ஒரு முடிவை மட்டும்தான் எடுக்க முடிந்தது இது என்னைப் பொறுத்தவரை ஒரு பலவீனமாகவும் இருக்கலாம்.

எங்கள் வாழ்க்கையின் அவலத்தை இனியும் சந்திக்கக் கூடாதென்ற ஒரே அவாவினால்தான் உங்களைப் பிரிந்திருக்க, தூர ஓடி ஒளித்துவிட முடிவுசெய்தேன்

உங்கள் எல்லோருக்கும் சுபம் சொல்லும்,

சுபேந்திரன்.

கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்கிறேன். திருப்தியில்லை. எவ்வளவோ சொல்லவேண்டும்போல் தோன்றுகிறது. ஆனால் மனம் பொறுமைப்படாமல் பதறிக்கொள்கிறது.

எவர் எவர்க்கெல்லாம் கடிதம் சேரவேண்டுமோ அவர்களுக்கெல்லாம் தனித் தனித் தபாலில் போட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்களது முகவரிகளையும் சரியாக எழுதுகின்றேன்.

திருப்தியான மனதோடு என் பயணம் தொடர்கிறது.

[ முற்றும் ]


## ஒரு கோடியில் ஒரு போக்கிரி

இங்கிலாந்தில் 18ம் நூற்றாண்டில் கடுந்தண்டனை விதிப்பவர் என்று எல்லோராலும் இகழப்பட்ட பிரதம நீதிபதி ஜெப்பர்ஸ் என்பவர் ஒரு கைதியைத்தனது பிரம்பால் சுட்டிக்காட்டி "என் பிரம்பின் ஒருகோடியில் ஒரு போக்கிரி இருக்கிறான்" என்று மிகுந்த இறுமாப்புடன் கூறினார்.

அப்போது அவரால் சுட்டப்பெற்ற மனிதன் "பிரபுவே, எந்தக் கோடியில்?" என்றான்

அனுப்பியவர்: ராகவன்


# நவீன உல்லாசக் குடிசைகள்



## எல்லாம் உங்களுக்காகவே

★ பிரதி சனி, ஞாயிறு நாட்களில் மதிய போசனம் Buffet Lunch-ரூபா 50/- மட்டுமே
★ எமது விசேஷமான ஐஸ் கிறீம் வகைகள்:

| | | | |
|---|---|---|---|
| வனிலா | ½ கலன் | ரூபா | 60/- |
| ஸ்ரோபரி | ½ கலன் | ரூபா | 60/- |
| சொக்லேட் | ½ கலன் | ரூபா | 70/- |

குளிருடன் கொண்டுசெல்லக்கூடிய (Rigifoam) பெட்டிகள் Rs. 50/- டிபொசிட்
யாழ்ப்பாணத்தில் வாங்கக்கூடிய விற்பனை ஸ்தாபனங்கள்
(1) JAFFNA PHARMACY 12 (38) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(2) FARM PRODUCTS, 79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package)
பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

★ கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாம் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.

★ புதுமணத் தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams: ANCHOR Kankesanturai.
Telephone: 22802 JAFFNA

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH

ஞாயிற்று

# 2 வது தடவையாக லாஸ்ஏஞ்சல்ஸில் 'ஒலிம்பிக்'



லாஸ் ஏஞ்சல்ஸில் ஆரம்பமாகியுள்ள '23-வது ஒலிம்பிக்' போட்டிகள் அரசியல் சர்ச்சைகள் சிலவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்ற போதிலும் நவீன 'ஒலிம்பிக்' வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொன்றாகவே விளங்குகின்றன

23 வது நவீன ஒலிம்பிக்கை நடத்துகின்ற பெருமையைப் பெறும் லாஸ் ஏஞ்சல்ஸ், இரண்டாவது தடவையாகவும் 'ஒலிம்பிக்' பந்தயங்களை நடத்தும் நகரம் என்ற பெருமையும் பெறுகின்றது 1932ம் ஆண்டில் இங்கு பத்தாவது ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 30ம் திகதி முதல் ஆகஸ்ட் 14ந் திகதி வரை இடம்பெற்றன.

## பைத்தியக்கார செயல்

லாஸ் ஏஞ்சல்ஸில் பத்தாவது ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றபோது உலகப் பொருளாதார நிலை மோசமானதாக இருந்தது அமெரிக்காவில் உள்நாட்டு அரசியல் பிரச்னைகளுடன் பொருளாதார நெருக்கடியும் சேர்ந்திருந்தது. அதனால் லாஸ் ஏஞ்சல்ஸில் அப்போது பலர் ஒலிம்பிக்கை ஒரு ஆடம்பரமான கேளிக்கை என்றுஎதிர்த்தார்கள். வீண்செலவுக்குரியன என்று கூறி வேலையற்றவர்கள் ஊர்வலங்களை நடத்தினார்கள்.

அப்போதைய அமெரிக்க ஜனதிபதியான திரு ஹோர்ஹூவர் கூட " இது ஒரு பைத்தியக்காரத்தனமான செயல்" என்று ஒலிம்பிக்கை வர்ணித்து அதனை ஆரம்பித்து வைப்பதனையும் தவிர்த்துக்கொண்டார்.

இதனல் தேசத்தலைவர்களாலும் மன்னர்களாலும் ஆரம்பித்து வைக்கப்படும் ஒரு உயர்ந்த வைபவமான ஒலிம்பிக் அன்று அமெரிக்க உபஜனதிபதியான சார்ள்ஸ் சேர்ட்டிஸினலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாறு அமெரிக்கத் தலைவர் ஒருவரின் அவமதிப்புக்குள்ளான 'ஒலிம்பிக்' பந்தயங்கள் இன்று 52 வருடங்களுக்குப்பின்னர் அமெரிக்கத் தலைவர் ஒருவரினலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது ஒரு வரலாற்றுப் பெருமை மிக்க மிகமுக்கிய நிகழ்ச்சியாகும்.

## பங்காளன்

ஜனதிபதி றெனல்ட் றீகன் 23 வது ஒலிம்பிக்கை ஆரம்பிக்கும் ஒரு விசேட அதிதியாக மட்டும் விளங்கவில்லை கடந்த மாதங்களில் சோவியத்தின் ஒலிம்பிக் பகிஷ்கரிடபை வாபஸ்பெறச் செய்வதில் முயன்றது, லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கிற்கு தமது நிர்வாகத்தின பூரண ஒத்துழைப்பை வழங்கியது, என்பவற்றின் மூலம் இப்பந்தயங்களின் ஒரு பங்காளியாகவும் அவர் மாறியுள்ளார்.

கலிபோர்ணியா மாநிலம் அமெரிக்காவின் மேற்குக் கரையோரப்பகுதியில் அமைந்துள்ளது. இதன் தலைநகரமே லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகும்

கடந்த சில மாதங்களாகவே இந்நகரை ஆக்கிரமித்திருந்த ஒலிம்பிக் குதூகலம் இன்று உச்சக்கட்டதை அடைந்துள்ளது. மூலைமுடுக்கெல்லாம் 'ஒலிம்பிக் வளையங்களே ஜொலிக்கின்றன

1976ம் ஆண்டு கனடாவில் மொன்ட்றியல் நகரத்திலேயே கடைசித்தடவையாக சோவியத் யூனியன், கிழக்கு ஜெர்மனிபோன்ற நாடுகளுடன் 2-வது ஒலிம்பிக்கில் அமெரிக்கா போட்டியிட்டது.

அப்போட்டிகளில் சோவியத் யூனியனும், கிழக்குஜெர்மனியும் பல தங்கப்பதக்கங்களுடன் அதிகளவு ஒலிம்பிக் பதக்கங்களைப் பெற்று முறையே முதலாம் இரண்டாமிடங்களைப் பெற, அமெரிக்காவால் மூன்றாமிடத்தை மட்டுமே பெறமுடிந்தது.

## அமெரிக்காவுக்கு வாய்ப்பு

மொன்ட்றியல் ஒலிம்பிக்கைத் தொடர்ந்து மாஸ்கோ ஒலிம்பிக்கைப் பகிஷ்கரித்ததன் மூலம், அமெரிக்கா உட்பட அதன் நேசநாடுகள் ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொள்கின்றன. ஆனல் இவ் ஒலிம்பிக்கை மாஸ்கோ, கி. ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, பல்கேரியா, கியூபா, போன்ற உலகப்பிரசித்திபெற்ற விளையாட்டுத்துறை நாடுகள் பகிஷ்கரிப்பதால் அமெரிக்காவுக்கே இத்தடவை முன்னணியில் நிற்கும் வாய்ப்பு பெருமளவு இருக்கின்றது.

கம்யூனிஸ் நாடுகள் மெய்வல்லுநர்ப்போட்டிகள், நீச்சல், ஜிம்னஸ்ட்டிக் போட்டிகள் பாரம்பரியமாக முன்னணியில் வருபவை இப்போட்டிகளுக்கே பெருமளவு பதக்கங்கள் ஒலிம்பிக்கில ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றில் பெரும்பகுதி அமெரிக்கரின் கழுத்தையே இந்த ஒலிம்பிக்கில அலங்கரிக்கவிருக்கின்றன என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது

## அமெரிக்க போட்டியாளர்கள்

அமெரிக்க போட்டியாளர்களில் கால்விலிஸ், எட்மோஸஸ்

கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரனைத் தொடர்ந்து எழுதுகிறார்.

## ஒலிம்பிக் போட்டிகள் — 12

பா. அனந்தகிருஷ்ணன்

மேரி ரி. மேகர், மேரி டெக்கர் போன்றவர்கள் முக்கிய போட்டியாளர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

23 வயதான கால்லிவிஸ் 100 மீட்டர்கள ஓட்டம், நீளம் பாய்தல் ஆகியவற்றில் கடந்த ஆகஸ்ட் ஹெல்சிங்கியில் இடம் பெற்ற உலக விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கங்களைப்பெற்று சாதனைகளை நிகழ்த்தியவர். இவர் 100மீட்டர்கள், 200 மீட்டர்கள் 4×100 மீட்டர்கள் நீளம் பாய்தல் ஆகியபோட்டிகளில் பங்கெடுக்கின்றார் இவற்றில் இவர் தங்கப் பதக்கங்களை பெறுவாராயின், 1936-ம் ஆண்டு பெர்லின் ஒலிம்பிக்கில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்ற அமெரிக்க கறுப்பரான ஜெஸ் ஓவஸின் வாரிசாகக் கருதப்படுவார்.

28 வயதான எட்மோசஸ் 400 மீட்டர்கள் தடைதாண்டி ஓட்டத்தில் பிரபலமானவர் 1976 மொன்ட்றியல் ஒலிம்பிக்கில் இப்போட்டியில் இவர் தங்கப்பதக்கம் பெற்றதுடன் பல உலகப்போட்டிகளிலும் முன்னணியில் திகழ்ந்தவர்.

## ஸோலாபட்

வீராங்கனை மேரி டெக்கர், 1500, 3000 மீட்டர்களில் உலக சாம்பியனாக இருக்கின்றார். 5000 மீட்டர்களிலும் இவருக்கு ஒரு உலக சாதனையிருந்தது லாஸ்ஏஞ்சல்ஸில் நீண்டதூர ஓட்டங்களில் இவர் முன்னணியில் நிற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது ஆனல் ஸோலாபட் (18வயது) என்ற தென்னபிரிக்காவில் பிறந்து அண்மையில் பிரிட்டன் பிரஜாவுரிமை பெற்ற வீராங்கனை இவரின்பிரதான எதிர்ப் போட்டியாளராக விளங்குவார்.

ஸோலாபட் கடந்த ஜனவரியில் மேரிடெக்கரின் 5000மீட்டர்கள் உலகசாதனையை 7 செக்கன்களால் மிஞ்சியவர் என்பது குறிப்பிடத்தக்கது எனவே இவர் சகல நீண்டதூர ஓட்டங்களிலும் மேரி டெக்கருடன் கடும் போட்டியிடவுள்ளார்.

## மீன் இனம்?

மேரி ரி மேகர் என்ற அமெரிக்க நீச்சல் வீராங்கனை (19 வயது) 100 மீட்டர்கள், 200 மீட்டர்கள் நீச்சல்களில் உலக சாதனையாளர். இவரின் தாயார் இவர் ஒரு மீன் இனத்தைச் சேர்ந்தவராயிருக்கலாமோவென சந்தேகப்படுவாராம் அத்துணை அபார நீச்சல்காரரான மேரி மேகர் லாஸ் ஏஞ்ஜசல்ஸில் சாதனை நிகழ்த்துவார் என்பதே பெரும்பாலானவரின் நம்பிக்கையாகும்

மாஸ்க்கோ ஒலிம்பிக்கில் 15-வது வயதில் இவர் பங்கெடுக்கத் தெரிவாகியிருந்தார். ஆனல் அமெரிக்கப் பகிஷ்கரிப்பினல் அதில் கலந்து கொள்ளமுடியவில்லை. இது குறித்து அப்போது இவர் மிகவும் வேதனைப்பட்டார்

மெய்வல்லுநர்ப் போட்டிகளுடன் பாரந்தூக்குதல் குத்துச்சண்டை, ஜிம்னஸ்ட்டிக் போன்ற போட்டிகளிலும் அமெரிக்காவுக்கு இத்தடவை அதிகளவு போட்டியிடச் சந்தர்ப்பம் இருக்காதென்று கருதப்படுகின்றது.

குத்துச்சண்டையில் கியூபா வீரர்களே அமெரிக்கர்களுடன் கடுமையாக மோதுபவர்கள். உலகபோட்டியொன்றில் அமெரிக்கா கியூபா ஆகிய இரண்டுமே கடந்த ஆண்டு தலா ஐந்துதங்கப்பதக்கங்களை பெற்றன. எனவே கியூபாவின் பகிஷ்கரிப்பு இப்போட்டியில் அமெரிக்காவுக்கு கூடுதல் வாய்ப்பை கொடுக்கின்றது.

## சீனவின் கங்கணம்

ஜிம்னஸ்ட்டிக், பாரந்தூக்குதல் ஆகியவற்றிலும் கம்யூனிஸ்ட் நாடுகளே முன்னணியில் திகழ்பவை ஆனல் சீன லாஸ் ஏஞ்சல்ஸ் வருவதால் ஜிம்னஸ்ட்டிக்கில் அதனுடன் அமெரிக்காவுக்கு பலத்த போட்டியிருக்கும். சீன இதில் 5 தங்கப்பதக்கங்களை நிச்சயம் கைப்பற்றுவேன் என கங்கணம் கட்டியுள்ளது

பாரந்தூக்குவதிலும் பல்கேரியா, கிழக்கு ஜெர்மனி ஆகியனவே நீண்டகால உலக சாம்பியன்கள் இவற்றின் பகிஷ்கரிப்பு, இப்பந்தயத்தில் கடும் போட்டியிடும் சில மேற்கு நாடுகளுக்கு அதிக வெற்றி வாய்ப்புகளைக்கொடுத்துள்ளது.

## அரசியலையும் விளையாட்டையும் பிரிக்கவேண்டும்

எனவே லாஸ் ஏஞ்சல்ஸ் 23-வது ஒலிம்பிக் பந்தயங்களை சோவியத்சார்பு நாடுகள் பகிஷ்கரிப்பது மேற்கு நாடுகளுக்கு அதிக ஒலிம்பிக் பதக்கங்களைப் பெறும் அதிர்ஷ்டத்தைக் கொடுத்துள்ளது.

இது ஒரு பெருமைக்குரிய விடயமல்ல. கவலைக்குரியதொன்று சகோதரத்துவத்தையும், உயர்ந்த விளையாட்டுத் தரத்தையும் கட்டிக்காக்கும் 'ஒலிம்பிக்' அமைப்பு, மாஸ்க்கோவில் அமெரிக்கப் பகிஷ்கரிப்பையும், தற்போது சோவியத் பகிஷ்கரிப்பையும் ஒரு துரதிஷ்டமானவையாகக் கருதி எதிர்காலத்தில் அரசியலையும் விளையாட்டுத்துறையையும் ஆழ வெட்டிப்பிரிக்கும் நடவடிக்கையில் அவசியம் இறங்கவேண்டும்.

## பணம்!

நீ
அதர்மத்துக்கு
ஆலவட்டம் பிடிக்கிறாய்!
அதனல்தான்
'தர்மங்கள், இங்கே
தூக்கிலிடப்படுகின்றன!

★

உனது சாம்ராஜ்யத்தில்
பாவங்கள் பாராட்டப்படு
கின்றன
புண்ணியங்கள்...
புதைக்கப்படுகின்றன!

★

பல சந்தர்ப்பங்களில்
'உண்மை'
உன்னல் ஊமையாக்கப்படு
கிறது (இதனல்)
'போலிகள்' பல
பொன்னுடை போர்த்து
பொன் விழாக்கோலம்
பூணுகின்றன!

★

சமூகக் காவலர்கள்
சத்தியத்தைக் காக்க
சட்டத்தைப் படைத்தனர்
நீயோ—
அந்த சட்டத்தாலேயே
சத்தியத்தாய்க்குச்
'சமாதிய யமைப்பாய்!

★

உனது உடைமையாளர்கள்
வேடிக்கைக்காகக்கூட
இரக்கப்பட்டது கிடையாது!
இரக்கப்பட்டாலும்—
அந்த இரக்கத்திலே...
'இறால் போட்டுச் சுறா
பிடிக்கும்'
இராஜ தந்திரம்
இணைந்திருக்கும்

—ச. சுதாகர்

வெளிநாடு செல்வதற்கு
★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்
(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)
இன்றே நாடுங்கள்
மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

## சிறுகதை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சொல்வதுபோல, அருளானந்தம் கடையிலே வீற்றிருக்கிறார். சாமான் வாங்க வந்த சனங்கள் 'நம்பர்' சகிதமாகக் கால்கடுக்க நிற்கிறார்கள் அவர்களிலே ஒருவருக்கு இரண்டுகிலோ சீனிக்கு 'றிசீற்' எழுதிக்கொடுத்து விட்டு அதற்கான பணத்தையும் அந்த மனிதரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார் அருளானந்தம் தராசு ஊசியைக் கவனியாமல் மின்னல் வேகத்தில் சீனியை நிறுத்துத்தள்ளுகிறான். 'சேல்ஸ்மன்' பக்கத்தில் நின்ற மைக்கலுக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.

''இதிலே சீனி குறைஞ்சிருக்கு. திரும்பவும் நிறு''

மைக்கல் போட்ட சத்தம் அருளானந்தத்தின் மானத்தை வாங்குகிறது. அவன் அவனை ஓங்கி அறைகிறான்

ஊமைச்சனங்கள் அருளானந்தத்துக்கு ஒத்தூதுகிறார்கள்.

உனக்கேன் தம்பி இந்தத் தரகுவேலை?''

''சாமான் வேண்ட வந்தா வேண்டிற்றுப் போறது தானே '' மற்றவன்ரை விசயத்தில் ஏன் குறுக்கிட வேணும் ''

சனங்களின் வார்த்தை சரம் சரமாகத் தாக்க முதல் நாள் போரிலேயே தோற்ற ராவணன்போல் மைக்கல் அவ்விடத்தை விட்டு நகருகிறான்.

விஷம் ஏறிய அருளானந்தம் அத்தோடு விட்டுவிடவில்லை

தான் கடமையிலே இருந்தபோது தன்னைத் தாக்கிவிட்டுக் கடையிலிருந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்துச் சென்றதாக மைக்கல் மீது ஒரு பொய் முறைப்பாட்டைப் பொலிசில் செய்கிறான்

பொலிஸ் ஜீப் மரியம்மாவின் வீட்டின் முன்வந்து நிற்கிறது.

விறாந்தையில் படுத்திருந்த மரியம்மாவிற்கு வியர்த்துக் கொட்டுகிறது. விருட்டென்று எழுந்து கொள்கிறாள் அவள்.

(யாவும்கற்பனை)

## அவனுக்கு

[6ம் பக்கத் தொடர்ச்சி]

மிக மிகக் கவனமாய் எடுத்து வந்து கொடுத்தான்.

கல்லைப்பார்க்க வந்தவன் பெட்டியைத் திறந்து கல்லை வெளியே எடுத்தான். அதைக் கண்டதும் அவன் உஹா'' உஹா'' என்று வாய்விட்டுச் சிரித்தான். ''இது ஒரு சாதாரண கல் ஒரு காசு கூடப் பெறாது''என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் இந்த மனிதனுக்குக் கோபம் வந்து விட்டது ''பொறாமைக்காரர் இப்படித்தான். மற்றவர்களுடைய பொருளை ஒரு காசும் பெறாது என்றுதான் சொல்லுவார்கள்'' என்று சொல்லி விட்டு மீண்டும் அந்தக்கல்லைப் பட்டுத் துணியிற் சுற்றிப் பெட்டிக்குள் வைத்தான்.

## மந்திரி வருகிறார்...

(3 ம்பக்கத் தொடர்ச்சி)

றும்போது கூறினர்;

''உங்கள் கிராமத்தில் சிறிய பொலிஸ் ஸ்டேஷன் கூட இல்லை. [illegible]லைநகர் சென்று இதற்கு ஆவன செய்கிறேன்.''

''அய்யா! மின்சாரம், நல்ல சாலை, குடிநீர் முதலிய முக்கிய தினசரித் தேவை- இப்படி அரசு கவனிக்கவேண்டியவை நிறையஇருக்கின்றன. பொலிஸ் ஸ்டேஷனுக்கு அவசியமில்லை. ஏனென்றால் குற்றங்களும், குற்றம் புரிவோரும் இந்தப் பகுதியில் இல்லையே'' என்றனர் அப்பாவி மக்கள்.

மந்திரி பதிலளித்தார்: அந்தக் கவலையை விடுங்கள் பொலிஸ் ஸ்டேஷன் வந்தவுடன் தானாகவே எல்லாம் (குற்றங்களும் குற்றம் புரிவோரும்) வரும்.

ஆதாரம்: மஞ்சரி,
தொகுப்பு– க. கனகராசா,
ச. நீ.

## கடல்கோட்டை

[9ம் பக்கத் தொடர்ச்சி]

கோட்டைக்குள் பதுங்கியிருக்கிறார்கள் அகதிகளாகப் பலர் இக்கோட்டைக்குள் இருக்கின்றனர். எனது கணிப்பின்படி குறைந்தது ஆயிரத்து ஐநூறு பேர் வரையில் கோட்டைக்குள் இப்போது உள்ளனர். முதலியார், இவ்வளவு பேருக்கும் தேவையான உணவு நீர் வசதிகள் கோட்டைக்குள் இருக்க முடியுமா? இருக்கின்ற உணவு முடிந்ததும் அவர்கள் தாக்குதல்களைத் தொடங்குவார்கள். பட்டினி போடுவது தான் அவர்களைப் பணிய வைக்க அல்லது வெற்றி கொள்ள இலகுவான வழி. உணவுப்பொருட்கள் முடிந்ததும் கோட்டைக்குள் பிரச்னைகள் உருவாகும். உணவுப் பொருட்கள் குறையக்குறைய அவர்கள் வாடிப்போவார்கள். அந்த வேளைகளில் நாம் முழுப் பலத்துடன் தாக்குதலைநடத்த வேண்டும்'' என்றான் வன்கோயன்.

கொமுசாறி வன்கோயன் இரண்டுமாதங்கள் வரை முற்றுகையைத் தொடர்ந்தான். கோட்டைக்குள் எப்பொருட்களும் செல்லாதவாறு கவனமாகக் கண்காணித்தான். கோட்டையின் கொத்தளங்களில் காவல் நின்ற வீரர்களிடம் அமைதியின்மை ஏற்படுவதையும் அவதானித்தான். பீரங்கிகளையும் எறிபொறிகளையும் தகுந்த இடங்களில் நிறுத்தித் தயார் நிலையில் வைத்துக்கொண்டான்.

1658, ஆனி 22ம் திகதி

முற்றுகை தொடங்கி, 105-ஆம் நாள் அதிகாலை, பயங்கரமாக விடிந்தது கொமுசாறி வன்கோயனின் கணிப்புத்தப்பவில்லை. கோட்டைக்குள் பட்டினி நிலை தோன்றிவிட்டது கோவாவிலிருந்து உதவிகள் வரும் என அவர்கள் எதிர்பார்த்ததும் பொய்த்தது. போர்த்துக்கீச கமாண்டர் பசென்டா கப்ரின் மூர்ரிற்குத் தாக்குதலைத் தொடங்குமாறு கட்டளை பிறப்பித்தான்.

யாழ்ப்பாணக்கோட்டையின் கிழக்குப்பக்க உயர்கொத்தலத்திலிருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்தப்படை வீரர்களை நோக்கி வெடித்தது அதனைத்தொடர்ந்து வடக்குப் பக்க கொத்தளத்திலிருந்தும் பீரங்கி சுடப்பட்டது அகன்ற அகழியைத் தாண்டிப் பீரங்கிக் குண்டுகள் தீச்சுவாலையுடன் ஒல்லாந்தரை நோக்கிப் பறந்து வந்தன ஆனால் அவற்றினால் ஒல்லாந்தபபடைவீரர்களின் இடத்தை அடையமுடியவில்லை.

வன்கோயன்கோட்டையைத் தாக்குமாறு உத்தரவிட்டான். ஒல்லாந்தரின் பீரங்கிகள் முழங்கின. வடக்கிலிருந்து பாய்ந்த முதற் குண்டே வடபுறக் கொத்தளத்தைச் சிதைத்தது. தொடர்ந்து மழைபோலப் பீரங்கிக் குண்டுகள்பாய்ந்தன கிழக்குப்பக்கக் கொத்தளமும் தகர்ந்தது அகன்ற சுவர்களில் நின்றபடி போர்த்துக்கீச வீரர்கள் துப்பாக்கிகளால் சுட்டனர்.

ஒல்லாந்தப்படை முன்னேறியது எறிபொறிகளை இயக்குமாறு வன்கோயன் கட்டளை பிறப்பித்தான். எறிபொறிகள் பெரும் பெரும் கற்களையும் தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசி எறிந்ததைத் திசைவீரசிங்கன் வியப்புடன் பார்த்தான் கோட்டைக்குள் கூக்குரல்கள் எழுந்தன. வீரர்களிடையே பதற்றமும் தயக்கமும் எழுந்தன

கோட்டைக்குள் குழுமியிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் இத்தகைய தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. நூற்று இருபதுபேர் எறிபொறிகளால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு மரணமானார்கள். மண்டைகள் பிளந்து இரத்தம் பாய்ந்தபோது. கோட்டைக்குள் தஞ்சம் புகுந்திருந்த பெண்களும் குழந்தைகளும் வீரிட்டலறினர். பலர் படுகாயமடைந்தார்கள்.

மூன்று மாதங்களாகத் தக்க உணவும், குளிப்பும், உடையுமின்றி அவர்கள் வாடியிருந்தார்கள். கண்முன்னால் விண்ணிலிருந்து கோட்டைமதில்களைத்தாண்டிப் பறந்துவரும் கற்களும் தீப்பந்தங்களும் அவர்களுக்கு மரணபயத்தைக் கொடுத்தன. நோயாளிகளும் காயமடைந்தோர்களும் கோட்டைக்குள் அதிகரித்தனர்.

கோட்டை மதில்களில் நின்றிருந்த வீரர்களின் துப்பாக்கிகள் இயங்க மறுத்தன.

ஒல்லாந்த வீரர்கள் வெற்றிக்கோஷமிட்டனர்

அவ்வேளை—

மேற்கு.அடிவானத்திலிருந்து பீரங்கி வெடிச்சத்தமொன்று சன்னமாக எழுந்தது கொமுசாறி வன்கோயன் திருப்தியாகத் திசைவீரசிங்கனைப் பார்த்தான்.

பார்வையின் அர்த்தத்தைத் திசைவீரசிங்கன் புரிந்து கொண்டான்

ஆம், ஊர்காவற்றுறைக் கடலின் நடுவே கம்பீரமாக உயர்ந்து நின்ற கடல்கோட்டையை ஒல்லாந்தக் கப்பல் படை தாக்கத் தொடங்கி விட்ட செய்தி அது.

(வளரும்)

> பொய் சொல்பவனுக்குச் சரியான தண்டனை, அவனை நம்பாமல் இருப்பதன்று. அவன் மற்றவர்களை நம்பமுடியாத அளவுக்கு மற்றவர்கள் நடந்து கொள்வதே.
>
> —பேர்னாட்ஷோ

## மினி பஸ்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளன. முதலாவது, மினிபஸ்களுக்குப் போட்டியாக வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை வசதியான பேருந்துகளை ஒவ்வொரு றூட்டிலும் போதியளவு சேவைக்கு விடுதல் இது நடக்குமா? நடக்காதா? பிரயாணிகள் சார்பில் இதனை வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் மேலான கவனத்திற்கு விட்டுவிடுகிறேன். இரண்டாவது வழி, மினிபஸ் உரிமையாளர்கள் சங்கம் எல்லா றூட்டிலும் இயங்குகின்றது. அதன் மூலம் சில நிபந்தனைகளை விடுக்கலாம் அதாவது குறிப்பிட்ட நேரத்திற்கு பின்வருகின்ற பஸ்ஸிற்கு அபராதம் விதிக்கலாம். உயரம் குறைந்த கூரையுள்ள எல்வ் பஸ் போன்ற நிற்கும் வசதியில்லாத மினிபஸ்ஸில் பிரயாணிகளை நிற்கவைக்காது ஏற்றும்படி பணிக்கலாம் நடத்துநர்களைப் பணிவாகவும், அன்பாகவும் பழகும்படி கேட்டுக்கொள்ளலாம். தொடங்கும் இடத்தையும், முடியும் இடத்தையும் தவிர இடையில் கூட சங்கமூலம் ஒரு மேற்பார்வை உத்தியோகத்தரை நியமிக்கலாம் இத்தகைய மாற்றங்களை மினிபஸ் உரிமையாளர்சங்கங்கள் செய்ய முன்வந்தால், தரமான,சிரமமற்ற அபாயமற்ற நல்லசேவையை வழங்குவதோடு, அநாவசிய செலவுகளையும் அசௌகரியங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம் அல்லவா? மினிபஸ் உரிமையாளர் சங்கங்களுக்கு, தினமும் பிரயாணம் செய்யும் பல்லாயிரம் பிரயாணிகளின் சார்பில் இவ்விண்ணப்பத்தைத் தாழ்மையோடு சமர்ப்பிக்கின்றேன்.

## தமிழ்தந்த தாதாக்கள்

(முன் தொடர்ச்சி)

வேலாயுத முதலியாருக்குத் தலையிடிகொடுத்து வந்தவர் மாப்பாண முதலியார். மாப்பாண முதலியார் தாம் வேலாயுத முதலியாருக்கு எல்லா வகையாலும் மேம்பட்டவர் என்னும் கருத்துக் கொண்டவர். அவர் தம் மேன்மையையும் பெருமையையும் மிகைப்படுத்திப் புலவர்களைக் கொண்டு பாடுவிக்க விரும்பியவர். தமக்குத் தெரிந்த புலவர் சிலரைக்கொண்டு சிறு பிரபந்தங்கள் பாடுவித்தமை போதாவெனக் கருதி நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவ

# கட்டளைக் கலித்துறை

# குற்றேவல் செய்தது

# எதுகையும் மோனையும்

# ஆறுகப்பாய்ந்தது

ரைக்கொண்டு பாடுவிப்பதற்குப் பெரும் பிரயத்தனங்கள் செய்து, அழைப்பும் விடுத்திருந்தார் அவர் ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் புலவரும் நல்லூரிலிருந்து பல்லக்கிலேறி. மட்டுவில் வழியாகக் கரவெட்டியை நோக்கிச் சென்றார்.

### இடைவழியில் நிகழ்ந்த

### ஆள்மாறாட்டம்

சின்னத்தம்பிப் புலவர் கோலாகலமாகப் புறப்பட்ட செய்தியை வேலாயுத முதலியார் அறிந்தார். அவருடைய வீட்டைத் தாண்டியே புலவர் போகவேண்டியும் இருந்தது. எனவே இரவிரவாக இடைவழியில் சொக்கட்டான் பந்தர் அமைத்து வெண்மணல் பரப்பி, வாழை தோரணங்கள் கட்டிக் குளிர்மைசெய்து, பெரிய மேடையமைத்துப் பச்சைப் பட்டு விரித்துப் பஞ்சணைத் தலையணைகள் பரப்பி, மங்கலங்கள் பொலிய வாசலில் நின்று வந்த புலவரை வணங்கி வரவேற்றார் புலவரும் தம்மை அழைத்தவரிவராகலாம் எனக் கருதி ஆசனத்தை அலங்கரித்துக்களைப்பாறினார். புலவரும் மனங்களித்துப் புரவலரை வாழ்த்தியமர்ந்தார்.

''ஆணிப்பொற் கொடை
வழங்கும்
பெருமாள் தன்கிளை வாழ்க
அனேக காலம்
சேணிக்கைப் புகழ்ச்சேது
நிலையிட்ட மாப்பாணன்
சேயாம் வேலன்
காணிக்கைப் பிரதாபமா
கவே
புலவர் வரக் கட்டில் மீது
மாணிக்கப் பிரகாசப் பச்சை
வடம்
விரித்தது நல்வடிவு
தானே''

### நன்மைபெருகப்

### பிரபந்தம் பாடுக

பாவின் சுவையுண்ட தமிழன், புலவர்கள் புகழவாழ்வதைப் பெரும்பேறென மதித்தவன். புலவர் புகழ்கேட்கும் போது விசும்பில் வலவன் என்

### க.சி. குலரத்தினம்

னும் பைலட் ஏவாத வானவூர்தியில் பிரயாணஞ் செய்த மாதிரியிருக்கும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கப் புலவர் பாடியுள்ளார்.

[11ம் பக்கம் பார்க்க]

## ஐயனார் தோத்திரம்

செண்டுறு கரத்தாய் போற்றி
சேரரும் பதத்தாய் போற்றி
விண்டுவின் புதல்வா போற்றி
வீரமா சாத்தா போற்றி
தொண்டுவந் தணைவாய் போற்றி
தூயமா மறையாய் போற்றி
அண்டுநர்க் கபயா போற்றி
ஐயனே போற்றி போற்றி

பண்டறி பரனே போற்றி
பாதகந் தீர்ப்பாய் போற்றி
கண்டறி யாதாய் போற்றி
காவலு மானாய் போற்றி
தண்டரு தருவே போற்றி
தகவருள் தகவே போற்றி
அண்டருக் கரியாய் போற்றி
ஐயனே போற்றி போற்றி

சந்தத மருள்வாய் போற்றி
சசியினைக் காத்தாய் போற்றி
வெந்துயர் தீர்ப்பாய் போற்றி
வேழவா கனத்தாய் போற்றி
சுந்தரத் துயர்வே போற்றி
சூழ்த்தமா மலரே போற்றி
அந்திவான் வடிவாய் போற்றி
ஐயனே போற்றி போற்றி

தெரிவரும் பொருளே போற்றி
தேறலின் தெளிவே போற்றி
எரியுமிழ் படையாய் போற்றி
ஏழரு மண்டா போற்றி
கிரிதனி லுறைவாய் போற்றி
கிளரொளி யானாய் போற்றி
அரிகரன் மைந்தா போற்றி
ஐயனே போற்றி போற்றி

— ச. தங்கமாமயிலோன்

● அனலைதீவு ஐயனார்கோவில் திருவிழா இன்று ஆரம்பம்.

# தமிழ் தந்த தாதாக்கள்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

''எமக்கு நன்மை பெருகும் வண்ணம் தாங்கள் ஒருபிரபந்தம் பாடுதல்வேண்டும்.'' என்று தாழ்மையோடு வேண்டுகோள் விடுத்தபோதே வெள்ளித்தட்டத்தில் வெற்றிலையும் தங்க நாணயங்களும் தாம்பாளத்தில் தேங்காய்களும் தயாராயிருந்தன.

குபுகுபுவெனவந்த

---

கோவை

---

பச்சைவடம் விரித்த கட்டிலின் மேலிருந்த புலவருக்குப் பாட்டு குபுகுபுவென வந்தது. பாவினங்களுள் கட்டளைக் கலித்துறை அவருக்குக் குற்றேவல் புரிந்தது. எதுகை மோனை நயங்கள் தங்குதடையின்றி நீராட்டம் போல வந்து பாய்ந்தன.

பாட்டுடைத் தலைவனாய வேலாயுதமுதலியாரின் சிறப்பியல்புகள் தகமைகளையெல்லாம் கேட்டறிந்தார் எடுத்த எடுப்பிலே காப்புச் செய்யுளிலேயே மற்பயில்வாகனன் சரவையில் வேலன் மகிபதிமேற் சொற்பயில் கோவைச் செழுந்தமிழ் மாலை தொடுத்துரைக்கச் சிதம்பரத்துச் சித்தி விநாயகன் திருவடியை வணங்கினூர்.

கரவைவேலன் புகழ்

---

பூவுலகை வென்ற இராவணனோடு போர் புரிந்த இராமன், இராவணனின் ஆயுதங்கள் அனைத்தையும் பஞ்சாய்ப் பறக்கச் செய்து அவனைத் தனித்தவனாக்கினுன். தனித்து நின்ற இராவணனை மன்னித்து நீ சென்று ஆயத்தங்களோடு நாளை வந்து போர் செய் என்று அவனுடைய உயிரை நல்கி விடைகொடுத்தான் இன்றுபோய் நாளைவாவென நல்கினன். நாகிளங்கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்'' என்று கம்டர் போற்றுவர்.

அந்த இராமன் வேறுயாருமில்லை. அவனே கரவையில் உள்ள இந்த வேலன் என்று சின்னத்தம்பிப்புலவர் சிறப்பித்து ''பூவென்ற மாவிலங்கேசனை நாளைக்குப் போர்புரிய வாவென்ற வீரன் கரவையில் வேலன்'' என்று ஏற்றங் கொடுத்துப்பாடினூர். ஆன்னும் சிந்தாமணியன்னவேலன் புலவர்கள் தொடுத்த தமிழுண்ட வள்ளல் பிரமனுக்குப் பொன்னளித்த யோகம் என்றெல்லாம் 425 பாடல்கள் பாடப்பாடப் பாடல் ஒவ்வொன்றுக்கும் தங்க நாணயமும் வெற்றிலையும் தேங்காயும் கொடுத்து வந்தார் வேலாயுதமுதலியார். ''உண்மைக்கு வாய்த்த சரவையில் வேலன் உயர்ந்த கொடை வண்மைக் கரதலம்போற் பொழிகாரப் புயல் வாழியவே'' என்பது வாழ்த்தின் உச்சம்.

இத்தகைய சிறப்பமைந்த இப்பிரபந்தத்தை வித்தியாதரிசி சதாசிவஐயரவர்கள் 1935ம் ஆண்டிலும், கரணவாய் ஆபூவார்ப்பிள்ளையவர்கள் 1956ம் ஆண்டிலும் பதித்துள்ளார்கள்.


**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெமினி - சரோஜாதேவி
**கல்யாண பரிசு**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
Shakey's
Machine

**ராணி** (யாழ். நகர்)
இன்னும் சில தினங்கள்
மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**
1-8-84 முதல்
**அன்புச் சகோதரர்கள்**

**ராஜா** (யாழ். நகர்)
28 - 30-7-84
Daily
10-30, 2-30, 4-30, 7-00
Richard Dreyfuss
in
WHOSE LIFE IS IT
ANYWAY
(Color-கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு)
31-7-84முதல்
**உலகம் சுற்றும்
வாலிபன்**

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30, 8-30
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S
LOVER
(strictly for adults)
கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்
கொழும்பில் 130 நாட்கள்
ஓடி சரித்திரம் படைத்த
ஆங்கில திரைக்காவியம்

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30
ரஜனி — ஸ்ரீதேவி
**மூன்று முடிச்சு**
புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
**ஆயிரம் ஜென்மங்கள்**
30-7-84 முதல்
எதிரொலி

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 7-00
Clint East wood in
FIRE FOX

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
இன்று மட்டும்
Armand Assante
Barbara Carrera
எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
'I The Jury'
பார்க்கத் தவறுதீர்கள்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்குமட்டும்)

மீண்டும் ...கடைசித்
தடவையாக
**றீகல்** (யாழ்.நகர்)
31-7-84 வரை
Henry Febar..
EYE OF THE NEEDLE
ஜேம்ஸ் பொன்ட் படத்தைப் பார்ப்பதுபோன்ற பிரமை. எதற்கும் கலவரப்படாமல் கச்சிதமாக காரியத்தை முடிக்கும் பயங்கரமான ஒற்றன். ஜேர்மனிய இரகசிய உளவாளியின் நடவடிக்கைகள் - விறுவிறுப்பு - சஸ்பென்ஸ்
Adults Only



**பம்பாய் வெண்காய விதை
விற்பனைக்குண்டு**
பித்தளை பொன் உருக்கும் கைத்துரித்தி
விற்பனைக்குண்டு
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்**
257, காங்கேசன்துறைவீதி-யாழ்ப்பாணம்.
1108


## நன்றி நவிலல்

26-06-84ல் சிவபதம் அடைந்த திருமதி சின்னம்மா முருகுப்பிள்ளையின் இறுதிக்கிரியைகளில் பல வழிகளிலும் உதவி புரிந்தவருக்கும், சமுகம் தந்தவருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், 26-07-84ல் அன்னருக்கு நடைபெற்ற வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றியவர்க்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முருகுப்பிள்ளை, திருமதி புவனேஸ்வரி கந்தையனுர், இரத்தினசிங்கம், பாலசுப்பிரமணியம், நடராசா, Dr. வேற்பிள்ளை, சிவசிதம்பரேசன் குடும்பத்தினர்,
இடைக்காடு, அச்சுவேலி. 1065

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தையா திருநாவுக்கரசு



தோற்றம்:
24-12-1950

மறைவு:
29-7-1983

எம்மைப் பிரிந்து ஓராண்டு கழிந்துவிட்ட போதிலும் புன்னகை மாருத உன் திருமுகம் எம் மனதில் நிறைந்து நிற்கின்றது.

இந்நிறைவுதரும் ஆறுதலில் உனக்கு எம் கண்ணீர் அஞ்சலிகள்.

பெற்றோர், சகோதரசகோதரிகள்
கொக்குவில் கிழக்கு,

மனைவி, பிள்ளைகள்
உடுவில் சுன்னுகம்.
1103


**குறெஸ் ட்ரவல் சேர்விசஸ் [பிறைவேற்] லிமிட்டெட்**

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?

கொழும்பு சென்று பிரயாண ஒழுங்குகள் செய்ய வேண்டுமே
என்ற கவலையே வேண்டாம்!

உலகின் எப்பாகத்திற்குச் செல்ல வேண்டுமானுலும் உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ். நகரிலேயே பதிவு செய்துகொள்ள உடன் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

குறிப்பு: பிரான்ஸ், இத்தாலி, செல்வதற்கான விசா, பயணச் சீட்டுக்கள் மற்றும் சகல ஒழுங்குகளும் மிகக்குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services(Pte) Ltd.
PASSENGER SALES AGENT FOR SWISSAIR
Telephone: No: 22040, 22065.
TELEX No. 22207 (C. T. S) C E
CTS

எமது ஸ்தாபனத்தின் இணைந்த சேவையாக தற்பொழுது ''குறெஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை'' ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

* வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ள வேண்டுமா? உங்கள் இல்லங்களிலுள்ள தொலைபேசியிலேயே உறவாடி மகிழ்ந்திட எம்மை நாடுங்கள்.
* உலகின் சகல பாகங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் நேரடித் தொலைத் தொடர்பு சேவையையும், டெலெக்ஸ் சேவையையும் ஒருநொடிப்பொழுதில் தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

Cross International
Telecommunication
Services
(குளிரூட்டப்பட்டது–பஸ்நிலையம்
முன்பாகவுள்ள மேல்மாடி)
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S) CE


## ஓராண்டு நினைவஞ்சலி

### இராசையா கணேசலிங்கம்



தோற்றம்:
27-11-65

மறைவு:
29-07-83

எங்கள் எல்லாரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது தங்களின் நினைவு எங்களை விட்டு அகலாது. தங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் ஏங்கித் தவிக்கும் அன்புப் பெற்றோர், பேத்தி, அத்தான்மார், அக்காமார், அண்ணுமார், தம்பிமார், மருமக்கள் உறவினர்கள்.
சந்தம்புளியடி, காரைநகர். 1105

## 83 ஜூலைக் கலவரத்தின் எதிரொலி:
# தமிழ்நாட்டில் 40,000 இலங்கைத் தமிழர் தஞ்சம்

(புதுடில்லி)

1983 ம் ஆண்டு ஜூலை இனக்கலவரம் காரணமாக சுமார் 40,000 இலங்கைத் தமிழர்கள் அதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர் என்று இந்தியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் வெளியான அதிகார பூர்வமான அறிவித்தலில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 1776 பேருக்கு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களில் இடம் அளிக்கப் ட்டுள்ளது. ஏனையோர் இலங்கைக்கு திரும்பிச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதினுல் அவர்களுக்கு அகதிகள் முகாம்கள் அமைக்கப்படவில்லை. ஆயினும் அவர்கள் தமிழ்நாட்டில் தங்கியிருப்பதற்கான சகல வசதிகளையும் இந்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சூ)

## வேலூர் தொலைக்காட்சி அஞ்சல்நிலையம்

(சென்னை)

வேலூரில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையமொன்றை இந்திய மத்திய எரிசக்திதுறை அமைச்சர் திரு. சிவசங்கர் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்திற்கு தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமை வகித்தார். தமிழ்நாட்டின் இரண்டாவது தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் இதுவாகும். (வெ)

## ரூபவாஹினியில் 'மஞ்சள் முகமே வருக'

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் அடுத்த மாதம் 8ம் திகதி புதன்கிழமை இரவு 'மஞ்சள் முகமே வருக' என்ற தமிழ்ப் படம் காண்பிக்கப்படவுள்ளது. இப்படத்தில் முத்துராமன், ஸ்ரீபிரியா நடித்துள்ளர்ன. [இ-வெ]

## இவ்வார தமிழ் நிகழ்ச்சிகள்

[கொழும்பு]

29-ம் திகதி ஞாயிறு:-
மாலை 5-55 வளர்பிறை முஸ்லிம் நிகழ்ச்சி
30-ம் திகதி திங்கள்:-
மாலை 6-35 'ஊரும் உலகமும்'
மாலை 7-15 கலையரங்கம் 'வண் தொண்டர்' நாட்டிய நாடகம்
31-ம் திகதி செவ்வாய்:-
மாலை 6-30 நம்நாட்டுத் திரைப்படம் கோமாளிகள் பாகம் II
1-ம் திகதி புதன்கிழமை:
மாலை 5-30 இது உங்கள் நாடு வெல்லன் ...
2-ம் திகதி வியாழன்:
மாலை 7-15 வாத்தியவிருந்து
3-ம் திகதி வெள்ளி:-
மாலை 6-00 விளையாட்டுப் பாரிற்சி

## வித்தியாலயத்தில் யந்திரம் கொள்ளை!

[வேலணை]

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர்காரியாலயத்தை உடைத்துஉள்ளே புகுந்த இளைஞர்கள் அங்கிருந்த ரோனியோ இயந்திரத்தையும், தட்டச்சு இயந்திரத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு வித்தியாலயத்துக்குச் சென்ற மூன்று இளைஞர்கள் அங்கிருந்த காவலரைக் கட்டிப்போட்டுவிட்டு அதிபர் அறையை உடைத்து உட்புகுந்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்றுக்காலை காவலர் எழுப்பிய கூக்குரலைக்கேட்டு அயலவர்கள் சென்று அவரைக்கட்டவிழ்த்துவிட்டனராம். காவலர் செய்த முறைப்பாட்டையடுத்து ஊர்காவற்றுறைப் பொலிசார் ஸ்தலத்துக்குவந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

## மீண்டும் தலைவர்

[பண்டத்தரிப்பு]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வட்டுக்கோட்டைத் தொகுதி கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெற்ற போது கிளைதலைவராகதிரு பொ. கந்தசமி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். பலத்த போட்டியின் மத்தியில் நடைபெற்ற தெரிவில் செயலாளராக திரு. க,பரமலிங்கமும், பொருளாளராக திரு. த.கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டன்.

## விபத்தில் இளைஞர் பலி!

[யாழ்ப்பாணம்]

லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் ஸ்தலத்திலேயே பலியரனுர்.

யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வகுமார் (வயது 25) பலியானவராவார்.

நல்லூர் அரசடிச் சந்தியில் நேற்றுமாலைஇவ்விபத்து நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட லொறி விபத்து நடைபெற்ற இடத்திலேயேநிறுத்தப்பட்டிருப்பதாகவும், லொறியின் சாரதியையும்,கிளீனரையும் அங்கு காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ]மா]

## புத்தர் சிலைகள் திருட்டு

[கொழும்பு]

புசலாவையிலுள்ள பௌத்த விகாரையொன்றில் பெறுமதிமிக்க தங்கத்திலான புத்தர் சிலையொன்றும் மற்றும் 24 வகையான பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது புராதனகாலத்தைச் சேர்ந்த தங்கத்திலான புத்தர் சிலையும், இரண்டு சிறிய புத்தர் 5 வெள்ளி விக்கிரகங்களும் களவாடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி இன்னமும் மதிப்பிடப்படவில்லையாம். [சூ]

## இரண்டாவது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தமாதம் 17ம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கூட்டணியின் நிலை குறித்து கேட்டபோது. மாநாட்டில்எமது நிலைகுறித்து எடுத்துக் கூறுவோம். உரிய பதில் கிடைக்காவிட்டால் தொடர்ந்து கலந்துகொள்வது குறித்து ஆலோசிப்போம் என்றூர்.

மாவட்ட சபைகளால் எதுவித பலனுமில்லை என்பது ஏற்கனவே நிரூபணமாகியிருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான ஒரேஅமைப்பே எமது தீர்வு எமதுஉயிர் உடமைகளும் இந்த அமைப்பின் கையில்தான் இருக்கவேண்டும் சிங்களகுடியேற்றங்களைத்தடுக்கும்அதிகாரமும் நிலப்பங்கீடும் இந்த சபைக்கு இருக்கவேண்டும். என்பதேஎமதுகோரிக்கை என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினூர்.

## இருவர்பலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். கணேசமூர்த்தி (30 வயது) வி. குமாரசிங்கம் (35 வயது) ஆகியோரே இறந்தவர்களாவர்

பிரேத பரிசோதனை நடைபெற்று மரணவிசாரணையில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

களுவாச்சிக்குடி பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றூர்கள். (சூ)


## மரண அறிவித்தல்
### தில்லைநடேசன்
(சட்டத்தரணி)

மாதனை பருத்தித்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி தில்லைநடேசன் காலமானுர். இவர் இராஜராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், சட்டத்தரணி தர்மலிங்கம், பாக்கியம் ஆகியோரின் ஏகபுத்திரனும், தர்மசீலன், குணசீலன், பராசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இவரது ஈமச்சடங்குகள் 29-7-1984 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு பருத்தித்துறை வெளிச்சவீட்டுக்கு அருகாமையிலுள்ள இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். 1118


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## சிறப்பாக நடந்த மாவைதேர்: 'அமிர்' விசேடபூசை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பஞ்சரத உற்சவம் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடந்துமுடிந்தது.

அன்று காலை 8 மணிக்கு விசேட பூசை ஆராதனைகளும் 9 மணிக்கு பஞ்சரத பவனியும் இடம்பெற்றன.

நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிம் விசேஷ பூசை ஆராதனை செய்தார். 'இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு தெய்வத்தின் துணைதான் அவசியம் என்று திரு. அமிர்தலிங்கம் அங்கு குழுமியிருந்தவர்களிடம் கூறினுர்

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு சிறப்பான சேவை நடைபெற்றது.வழக்கமாக பொலிசார் கவனிக்கும் கடமைகளை கிராம சேவயாளர்களின் உதவியுடன் இக்காரியாலயம் மேற்கொண்டது.

நேற்று அதிகாலை கீரிமலையில் ஆடி அவமாசைத் தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீர்த்தமாடினர்.

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சைவப் பெரியார் நூற்றூண்டு விழாச் சபையினர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் உதவியுடன் சைவபோதம் முதலாம் புத்தகத்தை வெளியிடவுருக்கிறூர்கள்.

இவ்வெளியீட்டு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறும் இவ்வெளியீட்டில் விக்டோரியாக் கல்லூரியில் வெளியிடப்பட்ட சைவபோதம் இரண்டாம் புத்தகமும் சேர்க்கப்படும்.

## லாஸ்ஏஞ்சல்ஸில் விபத்து

[லாஸ்ஏஞ்சல்ஸ்]

லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடத்துக்கு முன்பாக நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற மோட்டார் கார் விபத்தொன்றில் 3 பேர் இறந்துள்ளனர். 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சாரதியொருவர் பாதசாரிகள்மீது காரை மோதியதினுல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. ஒலிம்பிக் வீரர்கள் எவரும் இதில் காயமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை லிபிய வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து வெளியேறப் போவதாக அறிவித்துள்ளார்கள். இவர்கள் வேளியேறும் பட்சத்தில் லிபிய பத்திரிகையாளர்களும் வெளியேற்றப்படுவார்கள் என ஒலிம்பிக்கமிட்டி அறிவித்தமையைத் தொடர்ந்து இரு சாராரிடையேயும் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. [சூ]

## லலித்தின்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரதிபலன்கள் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் அறிந்துகொள்ளக்கூடிய தாகவிருக்குமென்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

இரு தினங்களுக்கு முன் இரத்தினபுரியில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒருவிதப் போட்டியில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும், அந்தப் போட்டியில் இன்னும் சில தினங்களுக்குள் தமக்குவெற்றி கிட்டிவிடுமெனத் தாம் நம்புவதாகவும் திரு. அத்துலத் முதலி மேலும் குறிப்பிட்டுள்ளார்

இரத்தினபுரியில் இடம் பெற்ற விளையாட்டு போட்டியொன்றின் பரிசளிப்பின்போது விசேஷ விருந்தினராகக் கலந்துகொண்டு அமைச்சர் உரைநிகழ்த்தினுர்.

24ம் திகதி வடக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நடத்திய உண்ணுவிரதம் அவர்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. மன்னார், வவுனியாப் பிரதேசங்களிலும் அவர்கள் நினைத்ததுபோல் நிலைமை இல்லை, மட்டக்களப்பிலும் அதிகமானவர்கள் இதில் ஈடுபடவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றுல், வடபகுதியில் அரசக் எதிரான நாசவேலைகளுக்கு பொதுமக்களிடம் அதிக ஆதரவு இல்லை என்பதே.

கடந்த வருடம் இடம்பெற்ற கலவரங்களைப் பயன்படுத்தி எமது அரசும் சிங்கள மக்களும் வன்செயல் வாதிகள் எனபதாக உலகம் முழுவதும் காட்டுவதற்கு இவர்கள் முயற்சி எடுத்துடன் எமது முகத்தில் சேற்றை வாரிப்பூச முனைந்துவந்தார்கள். ஆனுல் கடந்த சில தினங்களில் வட பகுதியில் சிலர் நடந்துகொண்ட விதமும், செயல்பட்ட முறையும், இன்று உலகம் முழுவதும் அவர்களின் உண்மை நிலைமை அவர்கள் மூலமேவே காட்டிக் கொடுத்துள்ளது என்றும் அமைச்சர் கூறினுர்.


## மரண அறிவித்தல்
### சுப்பிரமணியம் செல்வகுமார்
(அப்பு)

புளியங்கூடலைச்சேர்ந்த சுப்பிரமணியம் செல்வகுமார் (அப்பு) (வித்தியாமோட்டர்ஸ்) அகாலமரணமானுர்.

அன்னுர் காலஞ்சென்ற வே. த. சுப்பிரமணியம் திருமதி செல்லக்கண்ணு சுப்பிரமணியத்தின் அருமை மகனும், கழுத்துறை இராசமணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வரதராசா, அருமைநாயகம் இராசகுமார் (ஜேர்மனி) திலகேஸ்வரி புவனேஸ்வரி, சொர்ணகாந்தி ஆகியோரின் சகோதரரும், கணதிப்பிள்ளை, கனகசபாபதி, பராசக்தி இராசலெட்சுமி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னுரது ஈமக்கிரிகைகள் 29-7-84 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் 16, சீனிவாசகம் வீதியில் உள்ள அன்னுரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரிகைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றூர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1119